# உங்களுடைய பக்தி தியான வாழ்வை விருத்தியடையச் செய்தல்

**அஸ்திபார சத்தியம் தொகுப்பு 12**

**பீட்டர் டான்**

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்து இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள்.
வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# முகவுரை

ஒவ்வொரு புதிய கிறிஸ்தவனும் விசுவாசியும், முதலாவது செய்யும்படியாக சொல்லப்பட்ட காரியங்களில் ஒன்று, தினசரி அடிப்படையில் தேவனோடு எடுத்துக்கொள்ளும் விசேஷித்த நேரமாகும்; அது தேவனோடு தனிப்பட்ட பக்தி தியான வாழ்க்கையை விருத்தியடையச் செய்வதற்கான நேரம். அநேக மக்கள், அது ஜெபிப்பதற்கான நேரத்தைக் கண்டுபிடிப்பது, வேதத்தை வாசிப்பது, ஆராதிப்பது முதலியவற்றைக் குறிக்கும் என்பதை விளங்கிக் கொண்டிருக்கின்றனர். தினசரி காலண்டர் வடிவில் ஒன்றிரண்டு வசனங்களோடு, உற்சாகமூட்டும் கதைகளைச் சேர்த்து, குறுக்கு வழி தியானத்திற்கான சில பத்திகளை உடைய புத்தகங்கள் நிறைய கிடைத்தாலும்; இந்த தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்வைப் பற்றிய பகுதியில் விருத்தியடைய, மிகக் குறைவான புத்தகங்களே இருக்கின்றன என்பதே பிரச்சனையாகும். மற்றவர்கள் தினசரி வேத வாசிப்பிற்கான ஒரு கிரமத்தை வைத்திருப்பார்கள். அது நியாயமாக நல்லதாக இருக்கும்.

எனினும், நீண்ட நாட்களாக, கிறிஸ்தவர்கள் மேலோட்டமாக எழுச்சியூட்டும் தியானங்களையே தினசரி ஆவிக்குரிய வாழ்க்கைக்குச் சார்ந்திருப்பார்களானால், கர்த்தருக்கடுத்த காரியங்களில் அவர்களால் உண்மையாகவே வளர முடியாது. ஒரு நபரோடு நல்ல உறுதியான உறவை வளர்த்துக்கொள்ள வேண்டுமானால், அர்ப்பணிப்பும், நேரமும், தியாகமும் வேண்டும். நாம் உண்மையாகவே கர்த்தரோடு நல்ல மற்றும் உறுதியான உறவை வளர்த்துக்கொள்ள விரும்புவோமானால், அதே அளவு அர்ப்பணிப்பும், தியாகமும், நேரத்தை முதலீடு செய்வதும் தேவைப்படுகின்றன.

இந்த புத்தகம், தேவனிடமிருந்து அதிகம் எதிர்பார்ப்பவர்களுக்கு, தேவனைத் தேடுபவர்களுக்கு, நீதியின்மேல் பசிதாகம் உடையவர்களுக்கு உதவி செய்யும்படியாக எழுதப்பட்டது (மத். 5:6). கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத். 7:7–8). இது ஒவ்வொருவரையும் தனிப்பட்ட பக்தி தியான வாழ்வின் பாதையிலும் வேதவாசிப்பிலும் நடத்தி, தேவனுக்குள் பெரிய காரியங்களைச் செய்யும் சாலையில் நிறுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

*அத்தியாயம் 1*

# தினசரி பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுதல்

சபை சரித்திரத்தில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தின வல்லமையான தேவ மனிதர்களும், ஸ்திரிகளும், தங்களது ஆவிக்குரிய வாழ்க்கைகளின் முதலாவது படியை, தங்கள் தனி தியான வாழ்க்கையில் ஆரம்பித்தார்கள். ஜான் வெஸ்லி மற்றும் ஜார்ஜ் விட்பீல்ட் ஆகியவர்கள், தங்கள் கல்லூரி நாட்களில் அதிகாலையில் 4.00 மணிக்கு கூடின 'ஹோலி கிளப்' என்னும் தியான ஜெபக் குழுவில் புகழ்பெற்றவர்களாயிருந்தார்கள். அவர்கள் தினசரி அடிப்படையில் ஒவ்வொருவரும் தேவனோடு மணிக்கணக்காக நேரத்தை செலவிடுவதில் பெயர்போனவர்கள். ஜான் வெஸ்லி அதிகாலையில் 4.00 மணிக்கு தேவனோடு செலவிடும் தனிப்பட்ட நேரத்தில் வெற்றியடையாததை, பின்மாற்ற மாகவே கருதினார். மற்ற சில தேவ மனிதர்களும், ஸ்திரிகளும், சரீர இளைப்பாறுதலுக்காக படுக்கையில் ஏறுமுன், அதிக மணி நேரங்கள் தேவனோடு செலவிடத்தக்கதாக, இரவு நேரங்களைத் தெரிந்துகொண்டார்கள்.

ஒவ்வொருவருக்கும் 'சரியான நேரம்' என்ற ஒரு காரியமில்லை. நாம் ஒவ்வொருவரும் தனித்துவம் வாய்ந்தவர்களாகையால், சிலர் விடிந்துவரும் அதிகாலை நேரத்தை தேவனோடு அனுபவிக்க அதிகாலையில் எழும்ப தெரிந்தெடுக்கும்போது, மற்றவர்கள் கர்த்தருக்கு காத்திருக்க இரவு நேரத்தை தெரிந்துகொள்வார்கள். நம்முடைய வாழ்க்கையின் வித்தியாச மான காலக்கட்டங்களில் (or) பகுதிகளில், இரவு அதிகாலை என்று சுழற்சியைக் கூட நாம் மாற்றிக்கொள்ளலாம். மிக முக்கியமான காரியம் என்னவென்றால், நம்முடைய நேரத்தின் முக்கிய பகுதியை (அநேகமாக குறைந்தது ஒருமணி நேரம் அல்லது அதற்கதிகம் – அதிகபட்சம் இல்லை) ஒவ்வொரு நாளும் தேவனையும் ஆவிக்குரிய காரியங்களையும் தேட அர்ப்பணிக்க வேண்டியது அவசியமாகிறது. ஒருவர், காலைநேர நபராயினும் அல்லது இரவு நேர நபராயினும் காலை எழுந்தபின் முதல் சில நிமிடங்களும் அல்லது தூக்கத்திற்கு முன் கடைசி சில நிமிடங்களும், இந்தப் புத்தகத்தில் பின்பகுதியில் விவரிக்கப்படும் தியான பழக்கத்திற்காக விசேஷமாக கொடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்கிறோம்.

### *ஒருமணி நேர கொள்கை*

நம்முடைய இந்தக் கால சமுதாயத்தில், ஒவ்வொருவருடைய ஆவிக்குரிய வாழ்வின் நிலையை குறைந்த பட்சமாக காத்துக்கொள்ள, சாதாரணமாக குறைந்தபட்ச நேரம் எவ்வளவு நேரம்? சிலர் குறைந்தபட்சம் ஒரு நாளின் தசமபாகமான (2.40 மணிகள் ஒரு நாளைக்கு) நேரத்தைக் காணும்போது, சாதாரணமாக குறைந்த பட்சம் தேவைப்படும் நேரத்திறகு வேதாகமம் ஒரு துப்பு கொடுக்கிறது. அவருடைய ஊழியத்தில் அவருடைய சீஷர்கள் ஜெபத்தில் அவரோடு இருக்க வேண்டிய மிக நெருக்கடியான வேளையில், இயேசு தம்மோடு ஒருமணி நேரமாவது ஜெபத்தில் காத்திருக்கும்படி, தம்முடைய சீஷர்களை இயேசு அழைத்தார் (மத். 26:40).துரதிஷ்டவசமாக, சீஷர்கள் மிகவும் களைப்பாகவும் நித்திரை மயக்கமாகவும் இருந்தனர். அநேகமாக இயேசு அவர்களிடம் கேட்டுக்கொண்ட 'ஒருமணி' நேர ஜெப விண்ணப்பத்தில் வெற்றியில்லாமல் இருந்தனர். வெளிப்பாட்டின் ஆவிக்குரிய தன்மையை ஒருபோதும் உங்களுடைய தனிப்பட்ட சரீர களைப்பை அல்லது தூக்க மயக்கத்தை வைத்து நியாயந்தீர்க்காதீர்கள். மிக மேன்மையான வெளிப்பாடுகள் மற்றும் வல்லமையயன மகிமை வெளிப்பட்ட போதெல்லாம் சீஷர்கள் நித்திரை மயக்கமாகவும், தூக்க கலக்கத்தோடும் இருந்தார்கள் (லூக். 9:32). மிக அற்புதமாக இயேசுவின் மகிமை வெளிப்பட்ட போதெல்லாம் சீஷர்கள் மிகுந்த நித்திரை மயக்கத்திலிருந்து, அந்த வெளிப் பாட்டின் வாலை மட்டும்தான் பிடித்துக்கொண்டார்கள்; அது அவர்களுடைய பிற்கால வாழ்விலும் தாக்கத்தை உண்டாக்கியிருந்தது (2 பேது. 1:17–18).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

அதுல்லாம் அனாதை பிள்ளைகளின் தரிசனத்தைப் பற்றிக்குறிப்பிடுகையில், H. A. பேக்கர் என்பவர் மேசைகள் கீழும், படுக்கைகள் மேலும் சாய்ந்து இளைப்பாறிக் கொண்டு ஜெபித்துக்கொண்டிருக்கிற மற்ற பிள்ளைகளுக்கு பிசாசுகள், தூக்க மயக்கத்தை உண்டாக் கியதை பிள்ளைகள் எப்படி சில நேரங்களில் பார்த்தனர் என்று எழுதுகிறார் (Visions beyond the veil by H. A. Baker, Pages 80-81). உண்மையாகவே, எல்லா நித்திரை மயக்கமும் தூக்க கலக்கமும் பிசாசுகளினால் உண்டாக்கப்படுவதல்ல. சில வேளைகளில் அது வெறும் சரீர களைப்பாக இருக்கும். மற்ற நேரங்களில் ஆவிக்குரிய சூழ்நிலைக்கு, ஏற்றபடி மாறும்போது, சில தனிப்பட்ட மாம்ச சரீரங்கள் கொடுக்கும் பிரதிவினை ஆகும். தீர்க்கதரிசியாக தானியேல், கர்த்தரிடமிருந்து வல்லமையான தரிசனங்களைப் பெற்றுக் கொள்ள ஆரம்பிக்கும்போது, அவருடைய மாம்ச சரீரம், அந்த உயர்ந்த நிலை தேவ பிரசன்னத்திற்கு பிரதிகூலமான பிரதிவினை கொடுத்தது. அவர் சோர்வடைந்து நித்திரை மயக்கமாக மயக்கமுற்று, பல நாட்கள் பலவீனமாயிருந்தார் (தானி. 8:27). ஆவியானவருடைய காரியங்கள் ஆவிக்கேற்றபிரகாரமாய் நிதானிக்கப்படுகிறவைகளான தால், சரீரப்பிரகாரமான பிரதிவினைகளை வைத்து அதை நியாயந்தீர்க்க முடியாது (அது ஆவிக்குரிய காரியங்களை அளவிட மாம்சீக முறைகளை உபயோகப்படுத்துவது போல் இருக்கும்) (1 கொரி. 2:14).

சிலநேரங்களில் ஆவிக்குரிய பிரகாரமாய் நடக்க வேண்டியவற்றிற்கு நேர் எதிராக, இயற்கை உலகமும், சூழ்நிலைகளும் காட்டுவது போலிருக்கும். மிக வல்லமையான மகிமையான வெளிப்படுத்தல்களும், ஆவியானவரின் வெளிப்பாடுகளும், ஜெபத்தில் கடும் பிரசவவேதனைப்படும்போதும், பரிந்துபேசும்போதும், ஆராதிக்கும்போதும்தான் ஏற்படுகிறது என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். எழுப்புதலின் வரலாற்றில் இப்படிப்பட்ட காரியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் இதற்கு நேர்மாறாகவும் காரியங்கள் நடக்கும் என்பதை ஒருவர் விளங்கிக் கொள்ள வேண்டும். இயற்கையின் சூழ்நிலையால் கையளவை போன்ற சொற்பமான ஜனங்களே ஒரு கூடார கூட்டத்தில் கலந்துகொண்டபோது, கென்னத் ஹேகினின் வாழ்க்கையையும், ஊழியத்தையும் மறுரூபமடையச் செய்த எட்டு தரிசனங்களில் முதலானதைப் பெற்றுக்கொண்டார் (I believe in visions by Kenneth E. Hagin, Pages 42-43). 1950 ஆம் ஆண்டு செப்டம்பர் 2ஆம் நாள் எப்படி டெக்ஸஸ், ராக்வெல்லில் பகல் முழுவதும் மழை பெய்ததால் விரல்விட்டு எண்ணக்கூடிய 40 பேர் மட்டும் கூட்டத்திற்கு வந்தார்கள். எல்லாரும் கிறிஸ்தவர்களாயிருந்தபடியால், குறுகிய வேதபாடம் ஒன்றைக் கொடுத்து, ஜெபிப்பதற்காக எல்லாரையும் பலிபீடத்திற்கு அழைத்தார். என்ன அடுத்து நடைபெறும் என்று அறியாமல் காத்திருந்தார். அந்நியபாஷையில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, "இங்கே ஏறிவா" என்ற ஒரு சத்தம் அவரோடு பேசினதைக் கேட்டார். அவர் மேலே பார்த்த போது, அவர் இயேசுவை பார்த்தார். அவர் முதலாவது ஆவிக்குரிய வல்லமையான தரிசனத்தைப் பெற்றார்.

இயேசு பூமியிலே இருந்தபோது, சீஷர்கள் ஒருமணி நேரமாவது ஜெபிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி சீஷர்களோடு பேசினார். அந்த குறைந்தபட்ச ஒருமணி நேரம் தேவனோடு உறவு வைத்துக்கொள்ளவும், ஒருவரது ஆவிக்குரிய தன்மையை பராமரித்துக் கொள்ளவும், ஒருவர் தேவனோடு செலவழிக்கும் மிகக் குறைந்த நேரமாக நான் விசுவாசிக்கிறேன். இந்தக் காலக்கட்டத்தில், உலகம் தேவனை விட்டு மாம்ச இச்சையிலும், கண்களின் இச்சையிலும், ஜீவனத்தின் பெருமையிலும் சென்றுவிட்டதை நாம் எல்லாரும் அறிவோம். நீங்கள் செல்ல விரும்பும் திசைக்கு எதிராக ஒரு ஆறு பாய்ந்துகொண்டிருக்கும் போது, உங்களது நிலையில் நிற்கவாவது, அந்த ஆற்றின் ஓட்டத்திற்கு எதிராக நீந்த முயற்சி எடுக்க வேண்டும். எதிர் திசையில் நீந்த எந்த முயற்சியும் எடுக்காவிட்டால், கடலுக்கு நேராக அவர் அடித்துச்செல்லப்படுவார். அல்லது ஆறு ஓடும் ஓட்டத்தில் கொண்டுசெல்லப்படுவார். குறைந்தபட்சம் என்பது, மாம்ச சூழ்நிலையில் ஒருவரது ஆவிக்குரிய நிலையை தக்க வைத்துக்கொள்ளும் குறைந்தபட்ச அத்தியாவசிய நேரமே.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

இந்தக்காரணத்திற்காகவே, ஒரு நாளில் தேவனோடு ஒருமணிநேரம் அந்நிய பாஷையில் பேசியும், தேவனையும் அவரது வார்த்தையையும் தியானித்து செலவு செய்யவும், நாம் பரிந்துரை செய்கிறோம். ஆம், இதற்கு அதிகமான நேரம் அற்புதமானதாகும்.

*அறுவடை செய்வதற்கு முன்பு விதைக்க வேண்டும்*

அறுவடையை மிகுந்த பலனாக எதிர்பார்க்கும் எந்த மனிதனும், விதையை விதைப்பதற்கு நேரம் எடுக்காமலிருந்தால், அறுவடையை எதிர்பார்க்கவே முடியாது. வாழ்வில் மிகுந்த அலுவலாயிருப்பவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் தொடர்ந்து செல்ல, ஒவ்வொரு நாளும் ஒருமணி நேரமோ அல்லது அதற்கு மேலோ கொடுப்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை என்று எண்ணுபவர்களுக்கு, ஆவிக்குரிய மற்றும் இயற்கை வாழ்வில் பலன்களை அறுவடை செய்ய, பயனுள்ள முதலீடாக இந்த நேரத்தை அவர்கள் காண வேண்டும் என்று ஞாபகப் படுத்துகிறோம். மிகப் பெரிய பலாபலன்களைக் கொண்டுவரும் ஒரு வீட்டையோ, பலன் கொடுக்கும் முக்கியமான ஒரு சொத்தையோ அல்லது முதலீட்டுப் பத்திரங்களையோ வாங்கும் முன்பு, ஜனங்கள் நேரமெடுத்து அதைப்படித்து, ஆராய்ந்து, கண்டுபிடித்து, கடைசியாக அவைகளில் முதலீடு செய்கின்றனர். அப்படியென்றால், இந்த வாழ்வின் உலகத்திற்கான பலன்களை மட்டுமல்லாமல், நித்தியம் வரைக்கும் நிலைக்கும் ஆவிக்குரிய பலன் கொடுக்கும் பகுதிக்காக, எவ்வளவு அதிகமாகப் பிரயாசப்பட்டு முதலீடு செய்ய வேண்டும். வேதபாடமும், அதை வாழ்வில் நடைமுறைப்படுத்துதலும், ஆவிக்குரிய வாழ்வும், இந்த வாழ்வில் நல்ல வெற்றியை அனுபவிக்கும் பலன்களுக்கு காரணமாயுள்ளன (யோசு. 1:8). ஒருவருடைய கரங்களின் எல்லா வேலைகளும் செழிக்கும் (சங். 1:1–3). ஒருவருடைய வாழ்வில் ஆசீர்வதிக்கப்பட்ட தன்மை காணப்படும். ஒருவருடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற் பட்ட பகுதிகளும் கூட அப்படியே காணப்படும் (உபா. 28:1–14). பக்தி தியான நேரத்தை மிக முக்கியமான முதலீடான, இந்த வாழ்விற்கும் நித்தியத்திற்கும் ஒருவர் காணவேண்டும்; இவ்வாறு இதற்காக நேரத்தை *உண்டாக்கிக்* கொள்ளவேண்டும், அதற்கான நேரம் தானாக வரும் என்று காத்திருக்கக் கூடாது.

தேவனோடு விசேஷ பக்தியான நேரத்தை ராஜாக்கள் வைத்துக்கொள்வது அவர்களுக்கு அத்தியாவசியமானதாகும் (உபா. 17:18–19). தங்களுக்குச் சொந்தமான வேதாகம பிரதி ஒன்றை, தான் கைப்பட எழுதி தங்களுக்காக வைத்துக்கொள்வது, அவசியமானதாக சொல்லப்பட்டது. தங்கள் வாழ்நாள் முழுவதும் *எல்லா* நாட்களிலும் அதை வாசிக்க வேண்டும். தேசங்கள், பன்னாட்டு கார்பரேஷன்கள் மற்றும் அகில உலக ஊழிய தலைவர்களாக விரும்புகிறவர்கள், தங்களுக்குச் சொந்தமான விசேஷித்த பக்தி தியான வேதவாக்கியங்களை உருவாக்கி, மனுஷ மற்றும் தேவ ராஜ்யத்தின் மகத்துவத்திற்காக ஏதாவது சாதிக்க விரும்பினால், தேவனோடும் அவரது வார்த்தையோடும் தரமான பக்தி தியான நேரத்தை செலவிட வேண்டும்.

தேவனுக்காக வேலை செய்யும் மனிதனாக ஒருவர் அங்கீகரிக்கப்படும்படி தன்னை காண்பிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் (2 தீமோ. 2:15). தேவ வார்த்தை மட்டுமே உபதேசத்தையும், செயல் முறை ஆலோசனையையும், சீர்திருத்துதலையும், ஏவி எழுப்பப் படுதலையும் நமக்கு அளிக்கிறது. இவைகளால் நாம் நமது வாழ்வையும், நம்மைச் சுற்றி உள்ளவர்கள் வாழ்வையும் பாதிக்கும், அனுதின தீர்மானங்களை நம்மால் எடுக்க முடியும் (2 தீமோ. 3:17). ஒவ்வொரு நாளிலும் நாம் செய்து முடிக்க வேண்டிய எல்லாவற்றையும் முடிக்க, நமது ஆவிக்குரிய, மன மற்றும் சரீர உதவி பெற்றுக்கொள்ள முதலீட்டு நேரம் அவசியமாகிறது. தானியேல் தனது இளம்பிராயத்திலிருந்தே, ஒவ்வொரு நாளிலும் மூன்று முறை ஜெபிக்கும் ஆவிக்குரிய பழக்கத்தை உருவாக்கியிருந்தார் (தானி. 6:10). இயேசு ஜெபிப்பதற்காக *அடிக்கடி* வனாந்திரத்திற்குப் போய்விட்டார் (லூக். 5:16).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தீய நண்பர்களை விட்டு விலகி, தேவ வார்த்தையின்மேல் தியானமாயிருக்க, தனது இரவையும் பகலையும் செலவு செய்யும் மனிதன்மேல், வேதம் ஆசீர்வாதத்தை அறிவிக்கிறது (சங். 1:2–3). வரையப்பட்டுள்ள படம் என்னவெனில், ஒருநாள் தன் காலத்தில் கனி கொடுக்கும் நீர்கால்களின் ஓரமாய் வளரும் மரமாய் அது உள்ளது. கனி *கொடுக்குமா* என்பது கேள்வியல்ல. ஆனால், *எப்பொழுது* கொடுக்கும் என்பதுதான் கேள்வி. அதற்கு பதில் *'அதின் காலத்தில்'* என்ற சொற்றொடரில் உள்ளது. இஸரவேல் ஜனங்கள் மேலிருந்த தலைமைத்துவ மற்றும் ஊழிய ஆரம்பத்திலும், யோசுவாவிற்கு இதே வாக்குத்தத்தம்தான் கொடுக்கப்பட்டது. அவர் இரவும் பகலும் தேவ வார்த்தையின்மேல் தியானமாயிருக்கும் போது, நல்ல வெற்றி அவருக்குக் கிடைக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம்பண்ணினார் (யோசு. 1:8).

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற நமக்கு, அவராலேயன்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று நாம் நிச்சயமாய் அறிந்திருக்கிறோம். அவரை இரட்சகராகவும் ஆண்டவரா கவும் ஏற்றுக்கொண்ட பிறகு, இந்த வாழ்வில் நாம் சாதிப்பதெல்லாம், அவரிலும் அவர் மூலமாகவுமே செய்யப்படமுடியும். அவரிலும் அவர் வார்த்தையிலும் நாம் நிலைத்திருக்கும் வரையில்தான், நாம் அதிக கனிகளைக் கொடுப்போம் என்று அவர் சொல்லி இருக்கிறார் (யோவா. 15:4–5). இந்தக்காரியங்கள் நடைபெற, நாம் அவரது வார்த்தையில் நிலைத் திருப்பது அவசியம் என்று இயேசு அடிக்கடி வலியுறுத்தியுள்ளார் (யோவா. 14:23; 15:7; 17:6–8). அவரில் நிலைத்திருப்பதின் திறவுகோல், அவருடைய வார்த்தையை அனுதினமும் தியானிப்பதேயாகும்.

தேவ வார்த்தை அவர்களுடைய இருதயத்தில் இருப்பதற்கு, இஸ்ரவேலர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும், வழியில் நடக்கும்போதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும், அவைகளைக் குறித்துப் பேசி கருத்தாய் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும் என்று மோசே மிகவும் குறிப்பாய் இஸ்ரவேலர் களுக்குச் சொன்னார் (உபா. 6:6–7). வேறுவிதமாய் சொல்ல வேண்டுமானால், தேவ வார்த்தையினால் நிலையாக தங்களை சூழ்ந்துகொள்ள வேண்டும். கர்த்தரின் நாமம் வல்லமையுள்ளதும் நீதிமான்களுக்கு அடைக்கலமாயுமுள்ளது. ஆனால், தேவ வார்த்தை கர்த்தரின் நாமத்திற்கு மேலாக மகிமைப்படுத்தப்பட்டுள்ளது (சங். 138:2). தேவ வார்த்தையே தேவ நாமத்தின்மேல் நமக்கு விசுவாசத்தைக்கொடுத்துள்ளது. எழுதப்பட்ட வார்த்தையின் மூலமாகவே, பேசப்படுகிற வார்த்தை பரிசுத்த ஆவியானவர் மூலமாக கொண்டு வரப்படுகிறது (யோவா. 14:26; 16:13–14). பேசப்படுகிற வார்த்தை மூலமாகவே நமது இருதயங்களில் விசுவாசம் உதிக்கும், விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் (ரோம. 10:17; எபி. 11:6).

ஒரு தேவவார்த்தையோ அல்லது வாக்குத்தத்தமோ நிறைவேறாமல்போகிறதில்லை (1 இராஜா. 8:56). வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், கர்த்தருடைய வார்த்தை என்றைக்கும் நிலைத்திருக்கும். ஒவ்வொரு நாள் காலையிலும் எதிர்பார்க்கப்பட்டு உதிக்கும் சூரியனைக் காட்டிலும் அதிக நிச்சயமானதுதான் தேவ வாக்குத்தத்தங்கள். ஒவ்வொரு நாளும் நம் வாழ்வில் தேவ வார்த்தையானது ஊன்றப்படத்தக்கதாக, நல்ல நிலமாய் நிலைத் திருக்க நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும் (மத். 13:23). தேவ வார்த்தையில் நம்பிக்கை வைப்பது என்பது, இந்த அகிலத்தில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள எல்லா ஆதாரங்களின் மேலும் நம்பிக்கை வைப்பதாகும். தேவ வார்த்தையை அனுதினமும் தியானிக்கும்போது, இந்த அகிலத்தை சிருஷ்டிக்கப்பட்டுள்ள எல்லா ஆதாரங்களின்மேலும் நம்பிக்கை வைப்பதாகும். தேவ வார்த்தையை அனுதினமும் தியானிக்கும்போது, இந்த அகிலத்தில் சிருஷ்டித்த எல்லா வல்லமையின் ஆதாரங்களிலிருந்தும் நமக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்கிறோம். தனது சொந்த வார்த்தையை தேவன்தாமே நிச்சயப்படுத்துகிறார் (எபி. 6:17–18).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# *அத்தியாயம் 2*

# அனுதின மறுரூபம்

அநேகர் தங்கள் வாழ்வில் தங்கள் சூழ்நிலைகளுக்கு உடனடி நிவாரணத்தைத் தேடுகின்றனர். மற்றவர்களோ தாங்கள் படுமோசமான சூழ்நிலையில் இருக்கும்போது, தேவனைத் தேடுகின்றனர்; சிலர் தாங்கள் தவறான அல்லது கெட்ட சூழ்நிலையில் இருப்பதாக உணரும்போது தேவனைத் தேடுகின்றனர். முதற்குழுவினருக்கு ஆவிக்குரிய தன்மை வேகமான கான்சேல்ஸை (கார்ட்டூன் பூனை) போல இருக்க விரும்புகின்றனர். இரண்டாவது குழுவினர் பரிதாப சூழ்நிலைக்காரர்களாகவும், மூன்றாவது நிலையில் உள்ளவர்கள் தீயவர்களாக்கும்போது மனம் வருந்துகின்றனர். துர்அதிர்ஷ்டவசமாக வேதம் இவர்களுக்கு தேவனோடு நடக்கவும், ஆவியானவரோடு நடக்கவும் பரிந்துரை செய்கிறது. தேவனை பல்பொருள் அங்காடியைப்போலவோ அல்லது வேலைக்காரனைப்போலவோ நடத் தாமல் இருக்க வேதம் பரிந்துரைக்கிறது.

நாளுக்குநாள் தேவனோடு நடக்க நாம் முன்னேற வேண்டும். அனுதின மறுரூபத்தைப் பற்றி வேதம் பேசுகிறது (2 கொரி. 4:6). ஒவ்வொரு நாளாக நாம் வாழ இயேசு பரிந்துரை செய்கிறார் (மத். 6:34). நாம் அனுதின பக்தி தியான வேளையின்போது தேவனோடு நேரம் செலவழித்து, அவரது வார்த்தையின் மூலம் தேவ முகத்திற்குள் பார்ப்போமானால், அனுதினமும் மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாகிறோம் (2 கொரி. 3:18). இந்த வசனத்தின் சூழ்நிலை ஜெப ஆலயத்தில் வேதவாக்கியங்களை வாசிப்பதைப் பற்றிப் பேசுகிறது. திரை எடுத்துவிடப்பட்டதினால், கர்த்தருடைய மகிமையை கண்ணாடியிலே காண்பதுபோலக் கண்டு, நாம் மறுரூபமாக்கப்படுகிறோம் என்று அதைப்பற்றி பவுல் சொல்கிறார் (யாக். 1:22—25).

### *அனுதின பங்களிப்பினால் வளர்ச்சி*

ஆவிக்குரிய உலகின் காரியங்கள், ஒரே மிகப்பெரிய உருண்டையாக விழுங்குவதற்காக வடிவமைக்கப்பட்டவைகள் அல்ல; ஆனால், நாம் அனுதினமும் காற்று, தண்ணீர் மற்றும் உணவை நமது சரீரத்திற்கு ஒவ்வொரு முறையும் போதுமான அளவு எடுத்துக்கொள்வதைப் போல, அவைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று இயேசு சொன்னபோது, வாழ்விற்கு தேவ வார்த்தையினுடைய இன்றியமையா கொள்கையை அஸ்திபாரமாக போடுவதோடு, அனுதினமும் தேவ வார்த்தையை உட்கொள்வதைப்பற்றியும் அவர் பேசினார் (மத். 4:4). ஒவ்வொரு நாளும் நாம் ஒரு புத்தம் புதிய குறிப்பிட்ட அளவிலான ஆவியானவரையும், கிருபையையும், அன்பையும், மகிமையையும், விசுவாசத் தையும், மற்றும் ஆவிக்குரிய வாழ்வை உயிரூட்டும் ஆவிக்குரியவைகளையும் பெற்றுக் கொள்கிறோம். நாம் நமது வாழ்வில் (சிலநேரங்களைத் தவிர) உடனடியாக தாக்கத்தை உணரமுடியாமலிருந்தாலும், மாதாமாதமாக வருஷாவருஷமாக காலத்தின் மூலமாக அதன் தாக்கம் ஒன்று கூட்டப்பட்டு, நமது வாழ்வின் மேல் ஒரு புரட்சிகரமான தாக்கத்தை கொண்டுவரும்.

இயற்கை மற்றும் ஆவிக்குரிய உலகம் இரண்டிலும் வெற்றி என்பது, நமது முயற்சி களினால் மட்டுமல்ல வளர்ச்சியினாலும் வருகிறது. வெற்றிக்காக *வேலைசெய்வதை* விட, வெற்றியை நோக்கி *வளருகிறோம்.* தேவனுடைய வல்லமையான காரியங்களுக்காக நாம் *பாடுபட்டு முயற்சி* செய்வதைவிட, அவைகளுக்குள் நாம் *வளருகிறோம்.* புதிய ஏற்பாடு என்பது வித்தியாசமான பிரமாணங்களோடுள்ள பழைய ஏற்பாடு *அல்ல.* புதிய ஏற்பாடு என்பது *வாழ்வதன் புதிய வழியாகுமேயன்றி* புதிய பிரமாணங்களல்ல. புதிய ஏற்பாட்டின் மைய செய்தி என்னவெனில், நாம் இனி ஒருபோதும் வாழ்வதில்லை, கிறிஸ்துவே நமக்குள்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

வாழ்கிறார் (கலா. 2:20). நாம் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகி, விசுவாசத்தினாலே கிறிஸ்து நமது இருதயங்களில் வாழ்வதற்கு, நாம் நம்மை ஒப்புக்கொடுக்க மட்டும் கற்றுக்கொள்ள வேண்டும் (எபே. 3:17). நாம் மறுபடியும் பிறந்த போது, கிறிஸ்துவினுடைய ஆவியானவரின் ஒரு அளவைப் பெற்றுக்கொண்டோம் (ரோம. 8:15–17; 12:3; எபே. 4:7, 16). நமக்குள் இருக்கும் தேவ வித்து என்று அப்போஸ்தலனாகிய யோவான் அதை அழைக்கிறார் (1 யோவா. 3:9). இயேசு தாமே ஆவியானவரை அளவில்லாமல் பெற்றுக்கொண்டார். ஆனால், நாமெல்லாரும் அவருடைய ஒரு அளவை மட்டுமே பெற்றுக்கொண்டோம். அவருடைய அளவின் நிறைவுக்கு நேராக நாம் வளர வேண்டியவர்களாயுள்ளோம் (யோவா. 3:34; எபே. 4:13).

### *கிருபையினால் வளருதல்*

புதிய உடன்படிக்கை என்பது கிருபையின் யுகமாகும், ஏனெனில் நியாயப்பிர மாணத்தின் கிரியைகளினால் நாம் ஒருபோதும் நடப்பதில்லை (எபே. 3:2; கலா. 2:16). பழைய உடன்படிக்கையில் ஒரு நபர் தனது கிரியையைப் பொறுத்தே பெற்றுக்கொள்வார், அது கூலி என்னப்படும். ஆனால், புதிய உடன்படிக்கையில், கிருபையின் ஈவினாலே நாம் நீதிகரிக்கப்படுகிறோம் (ரோம. 4:4, 16; 5:1–2). கிறிஸ்துவிலே நாம் கிருபையின் ஈவையும் நீதியின் ஈவையும் பெற்றுக்கொண்டோம். அவைகளினால் அவர் மூலமாய் நாம் வாழ்விலே ஆளுகை செய்வோம் (ரோம. 5:17). இயேசுகிறிஸ்துவிலே, அவருடைய தயவினாலே, இந்த யுகத்திலும் வரப்போகும் யுகத்திலும் அவருடைய கிருபையின் அளவிடமுடியாத ஐஸ்வரியத்தை நமக்குக் காண்பிப்பது தேவனுடைய ஆசையாயிருந்தது (எபே. 2:7).

பழைய ஏற்பாட்டிலே, கிருபை (எபிரேய பதம் *'சென்'* *Chen*) என்பது கிடைக்கும் தயவாகும். தங்கள் மேல் கிருபையைப் பெற்றுக்கொண்ட எல்லாரும், அவர்கள் இருந்த ஒவ்வொரு சூழ்நிலையிலும் செழிப்படைந்தார்கள். யோசேப்பு போத்திபாருவின் வீட்டிலும் சிறைச்சாலையிலும் அடிமையாக சேவை செய்துகொண்டிருந்தாலும், அவர்மேலிருந்த தேவ கிருபை அவர் செழிக்க காரணமாயிற்று (ஆதி. 39:4, 21). இந்த இரண்டு சூழ்நிலைகளிலும் தலைவனாயிருக்கும் நிலையை அடைந்து, அவருடைய கைக்குக் கீழ் எல்லாவற்றிற்கும் பொறுப்பாயிருந்தார். அதைத் தொடர்ந்து பார்வோனுக்குக் கீழே எகிப்து முழுவதையும் ஆளுகைசெய்கிறவனானான். தானியேலுக்கும் தனது வாழ்வின் மேல் கிருபையின் செயல்பாடு உண்டாகி, ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குக் கீழே முழு சாம்ராஜ்யத்திற்கும் பொறுப்பாளராக முடிவில் வந்துவிட்டார் (தானி. 1:9; 2:48). வறுமையோ, அடிமைத்தனமோ, எல்லாவற்றையும் இழந்த பரிதாப சூழ்நிலையோ, பொருளாதார இழப்போ, இயற்கையான அல்லது சமூக அல்லது அரசியல் அல்லது பொருளாதார பேரிடர்கள் எதுவும் தேவ கிருபையின் வல்லமைக்கு முன்பு எதிர்த்து நிற்க இயலவில்லை. உங்களது வாழ்விலே ஆசீர்வாதத்திற்குமேல் ஆசீர்வாதத்தை ஈர்க்கும் தொட்டுணரக்கூடியதும் வல்லமையானது மான சக்திதான் அது. அப்படியென்றால் சவால்களே இருக்காது என்பது அர்த்தமல்ல. ஆனால், தேவ கிருபையால் அவைகள் மேல் மகிமையாக நீங்கள் வெற்றிபெறுவீர்கள் என்பதே அதன் அர்த்தமாகும்.

புதிய ஏற்பாட்டில், கிருபை (கிரேக்க பதம் *'காரிஸ்'* *Charis*) தொடர்ந்து அதே வல்லமையுடையதாய் உள்ளது. ஆனால், அதற்கு ஒரு புதிய வெளிப்படுத்துதல் உள்ளது. கிருபை என்பது கண்களில் கிடைக்கும் தயவு மட்டுமல்ல; பெலனையும், ஆற்றலையும், வரங்களையும் பகிர்ந்தளிக்கும் ஆவிக்குரிய காரியங்களுமாகும். தேவ கிருபைதான் பேதுருவை யூதருக்கு அப்போஸ்தலனாகவும், பவுலை புறஜாதியாருக்கு அப்போஸ்தலனா கவும் இருக்க பெலப்படுத்தினது (கலா. 2:8, 9). ஐந்துவகை ஊழியங்கள் எல்லாமே அவருடைய கிருபையின் பகிர்ந்தளிப்பேயாகும் (எபே. 4:7–11). பரிசுத்த ஆவியானவரின் எல்லா வரங்களும் பகிர்ந்தளிக்கப்பட்ட கிருபையின் விளைவுகளேயாகும் (ரோம. 12:6). வாக்கு வரம் *'கரிஸ்மா'* *Charisma* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. அது ஒரு

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

அர்த்தத்தில் *gracelets gracelets* 'சின்ன சின்ன கிருபைகள்' என்று மொழிபெயர்க்கப்பட முடியும் – அவருடைய கிருபையின் வெளிப்படுத்துதல்.

பவுல் பலவீனமாயிருந்தபோது, விசேஷமாக தேவ பெலன் அவருக்குத் தேவையாயிருந்த போது, அவருக்கு தேவ கிருபைதான் தேவையாயிருந்தது என்று அவருக்குக் காண்பிக்கப் பட்டது. "*என் கிருபை* உனக்குப் போதும், பலவீனத்திலே *என் பலம்* பூரணமாய் விளங்கும்" என்று தேவன் அவருக்குச் சொன்னார் (2 கொரி. 12:9). *என் கிருபை, என் பெலன்* ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்திருப்பதையும் சம்பந்தப்பட்டிருப்பதையும் கவனியுங்கள். கிருபை என்பது நமக்குள் உள்ள தேவ பெலனாய் *இருக்கிறது.* தேவ கிருபையில் *பெலப்படும்படி* தீமோத்தேயுவுக்குச் சொல்லப்பட்டது (2 தீமோ. 2:1). பெலப்படு என்ற வார்த்தை *endunamou* என்டுநாமௌ என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. அதனுடைய அட்சரப்பொருள் என்னவெனில், தேவ கிருபையில் *உள்ளாகப் பெலப்படுத்தப்படுவதே "நான் இருக்கிறது* தேவ கிருபையி*னாலே* இருக்கிறேன். அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்க வில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது", என்று பவுல் அறிவித்தபோது இந்த வெளிப்பாட்டை பவுல் தெளிவாக விளங்கியிருந்தார். பவுல் அவ்வண்ணமாய் இருந்ததிற்கு தேவ கிருபைதான் அவரை அவ்விதமாய் உருவாக்கிற்று! அவர் செய்த ஒவ்வொன்றும் (நான் மிகவும் அபரிமிதமாய் உழைத்தேன்) அவர் மூலமாக கிரியை செய்த தேவ கிருபையாயிருந்தது!

கிறிஸ்துவிலே நாம் பெற்றுக்கொண்ட கிருபையின் அளவு, கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே தொடர்ந்து வளர்ந்து பெருக முடியும் (2 பேது. 1:2). தேவ கிருபையில் நாம் வளரமுடியும் (2 பேது. 3:17). ஒரு அளவு கிருபையிலிருந்து இன்னொரு அளவிற்கு நாம் வளருகிறோம். இயேசுவின் பரிபூரணத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்கிறோம்; கிருபையின் மேல் கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம் (யோவா. 1:16). கிரேக்க மொழியில் அட்சரப் பொருளில், *கிருபையின் உச்சியின்மேல் கிருபை (charin anti charitos - John 1:16).* பெலனில்லாமல் போய் அல்லது ஒரு காரியத்தை செய்து முடிக்க முடியாமல் போகும் சூழ்நிலையில் நாம் எப்பொழுதெல்லாம் இருக்கிறோமோ அப்பொழுதெல்லாம் இரக்கத்தைப் பெறவும் *ஏற்றகாலத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் கிருபாசனத்தண்டையில்* நாம் சேரவேண்டும் (எபி. 4:16).

### *நிரம்பிவழிகிற வாழ்வை வாழ்தல்*

நாம் பெற்றுக்கொண்டதும் நிலைநிற்கிறதுமான கிருபையின் அளவிலே மிதந்து செல்வது தான் கிறிஸ்தவ வாழ்வின் இரகசியமாகும். "மிகவும் அபரிமிதமாக உழைக்கும்படி" நம் வாழ்வில் கிருபையை அனுமதிக்கும் காலம் வரைக்கும், நாம் போராடமாட்டோம். ஏனெனில், நாம் அல்ல, ஆனால் நம் மூலமாக கிரியை செய்யும் தேவ கிருபையே. நாம் கிறிஸ்துவை அறிகிற அறிவிலே கிருபை நமக்குப் பெருகுகிறபடியினாலும், கிறிஸ்துவை அறிகிற அறிவு, அவருடைய வாக்குத்தத்தங்களில் அடங்கியிருக்கிறபடியினாலும், தேவ வார்த்தையை தியானிப்பதன் மூலமாக அதிக கிருபையில் வளருவதே திறவுகோல் என்பது வெளிப் படையானதே (2 பேது. 1:3–4).

நிரம்பிவழிவதின் மூலமாகமே நம் அனுதின வாழ்வை நாம் எப்போதும் வாழ்கிறோம். கிறிஸ்து அவருடைய அன்பினாலே நம்மை நிரப்புவதால்; அவருடைய அன்பினால் நாம் நிரம்பிவழிவதால், மற்றவர்களுக்கு நம்மால் அன்பைப் பகிர்ந்தளிக்க முடிகிறது. கிறிஸ்து அவருடைய விசுவாசத்தினால் நம்மை நிரப்புவதால், அவருடைய விசுவாசத்தினால் நாம் நிரம்பிவழிவதால், மற்றவர்களுக்கும் நாம் விசுவாசத்தை பகிர்ந்தளிக்க முடிகிறது. கிறிஸ்து தம்மால் நம்மை நிரப்புவதால், கிறிஸ்துவைப் போலிருப்பதில் நிரம்பி வழிவதில் நாம் பெலப்படுத்தப்படுகிறோம். நித்திய ஜீவனுக்காக ஊற்றெடுத்து உயரும் ஊறுகிற நீரூற்றாக

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

கிறிஸ்துவிலே நாம் பெற்றுக்கொள்ளும் தண்ணீர் மாறுகிறது (யோவா. 4:14). அவர் நமக்குக் கொடுக்கும் தண்ணீர், அவரது ஜீவனும் அவரது கிருபையுமாகும். அது நம்மிலிருந்து ஊற்றாகவும் ஜீவநதியாகவும் பெருக்கெடுக்கும்படி மாற வேண்டும்.

அவரது ஜீவன் நிரம்பிவழிவதிலிருந்து, நாம் எப்பொழுதும் ஊழியம் செய்கிறோம். அதனுடைய அர்த்தம் என்னவென்றால், நம்மூலமாக நிரம்பிவழியுமுன்பு, முதலாவது அவரது ஜீவன் நம்மை நிரப்பி பூரிதமாக்க வேண்டும். நாம் நிரம்பிவழிவதிலிருந்து, பிறகு நாம் மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்து உதவ முடியும். உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் *வரைக்கும்,* எருசலேமிலே காத்திருங்கள் என்று இயேசு சீஷர்களுக்கு குறிப்பாய் சொன்னார் (லூக். 24:49). பெந்தெகொஸ்தே நாளிலே அவர்கள் ஆவியானவராலே நிரப்பப்பட்டு, சாட்சிகளானார்கள் (அப். 1:8; 2:4). ஆவியானவரால் நிரப்பப்படுவது, நமது வாழ்வின் அனுதின அவசியமாகிறது (எபே. 5:18). கிரேக்க அட்சரமொழிபெயர்ப்பு, *ஆவியானவரால் நிறைந் திருங்கள்* என்பதே! செய்வதற்கு முன்பாக, இருப்பது வருகிறது.

ஒவ்வொரு நாள் காலையிலும் நாம் எப்பொழுதும் செய்ய வேண்டிய முதற்காரியம், ஆவியானவரால் *நிரம்பி* இருப்பதே. பகல் முழுவதிலும் இரவு முழுவதிலும் நாம் அதை *பராமரித்துக்கொள்ள* வேண்டும். ஆவியானவரால் நிரம்பியிருப்பது சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுக்களினாலும், நம்மூலமாக வெளியே பாய்ந்து செய்கிறது (எபே. 5:19). ஆவிக்குரிய பாடல்கள் என்பவை அந்நிய பாஷையில் பேசுவது மற்றும் பாடுவதோடு, பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட புதிய பாடல்களையும் புதிய ராகங்களையும் உள்ளடக்கும் (1 கொரி. 14:15). ஆவிக்குரிய பக்திதியான வேளையின் ஒரு பகுதி, அந்நிய பாஷையில் பேசி ஒவ்வொருநாளும் நாம் பக்திவிருத்தி அடைவதுமாய் இருக்க வேண்டும் (1 கொரி. 14:4). தனிமையிலே பவுல் கிரமமாக குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அந்நிய பாஷையில் பேசினார். எல்லா கொரிந்தியர்களும் (அந்நிய பாஷையில் பேச தீவிரமாயிருந்தவர்களும் அதை தவறாக பயன்படுத்தியவர்களும்) தனித்தனியாக பேசுவதை ஒன்று சேர்த்தால் எவ்வளவு பேசியிருப்பார்களோ, அதைவிட அதிகமாக (தனிப்பட்ட முறையில்) பேசினதாக பவுல் சொல்லவும் செய்தார் (1 கொரி. 14:18).

நாம் ஆவியானவரால் நிரம்பியிருக்கும்பொழுது, நம்மைச் சுற்றியிள்ள ஆவிக்குரிய துணியைப் போலவும், அல்லது போர்வையைப் போலவும், அது இருக்கிறது (லூக். 24:19). நிரப்பப்பட்ட நிலையிலிருந்து நாம் ஆவியானவரில் நடக்க முடியும் (ஆவியானவர் நம்மில் இருப்பதில்லை, ஆனால் நாம் ஆவியானவ<u>ரில்</u> இருக்கிறோம் என்ற படத்தை இங்கு கவனிக்கவும்). ஆவியானவரில் நடக்கும்பொழுது, நாம் மாம்ச இச்சையை நிறைவேற்று கிறதில்லை (கலா. 5:16). நிரம்பிவழியும் வாழ்க்கை, மாம்சத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது. தற்காலிகமான உலக சரீரத்தில் நாம் இருக்கும்வரையில், பாவம் செய்வதற்குரிய திறன் நம்மில் இருக்கிறது. ஏனெனில் பாவ சுபாவம் நமது சரீரத்திற்குள் இருக்கிறது (ரோம. 7:17–18, 23–24). ஆவியானவரில் நடப்பதின் மூலமாக கிறிஸ்தவ பூரணத்துவம் அனுதினமும் பராமரிக்கப்படுகிறது. அவ்விதமாக செய்வதால், ஆவியானவரின் கனிகள் எல்லாம் நம்மிலிருந்து பாய்ந்து செல்லும். கிறிஸ்துவைப் போலாகுதல் நமது அனுதின அனுபவமாகிறது.

இவ்வாறு வார்த்தையின் அனுதின பூரிதத்தன்மை மற்றும் ஆவியானவரின் அனுதின நிரப்பப்படுதல், நமது வாழ்வில் மகிமைமேல் மகிமை அடையும் மறுரூபத்தை கொண்ட வருகிறது. ஒவ்வொரு நாளும் நமது சரீரங்களை ஜீவ பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த உலகம் நமக்கு உத்திரவிடு வதை நாம் தெரிந்தெடுத்துக்கொள்ளாமல், நமக்குள் இருக்கிற கிறிஸ்துவை நம் மூலமாக வாழ அனுமதிக்க வேண்டும் (ரோம. 12:1–2). மறுரூபம் என்ற வார்த்தையின் கிரேக்க வார்த்தை மெட்டாமார் பூமாய் (metamorphoomai) என்ற வார்த்தையிலிருந்துதான் மெட்டமார்பாசிஸ் (metamorphosis) என்ற ஆங்கில வார்த்தை வருகிறது. இது, ஒரு கூட்டுப்புழு வண்ணத்துப் பூச்சியாக மாறும் தொடர்நிகழ்ச்சியாகும். இதே கிரேக்க வார்த்தை

தான், மலையில் இயேசு மறுரூபமானதையும் குறிக்க பயன்படுத்துப்பட்டுள்ளது (மத். 17:2; மாற். 9:2). ஒவ்வொரு நேரத்திற்கும் கொஞ்சம் கொஞ்சமாக அனுதினமும் நாம் மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாகிறோம் (2 கொரி. 3:18). இயேசுவுக்கு *அவர் ஜெபித்தபொழுது நடந்தது;* நமக்கோ *நாம் ஜெபித்து* தேவனோடு நேரம் செலவு செய்யும்போது அது நடக்கிறது (லூக். 9:29).

## *அத்தியாயம் 3*

# தனிப்பட்ட ஆராதனை நேரம்

தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும்காலம் வருகிறது என்று இயேசு சொன்னார் (யோவா. 4:23). உண்மையிலே, அப்படிப்பட்டவர்கள் தன்னை தொழுது கொள்ள வேண்டும் என்று பிதா நாடுகிறார். சபைக்குப் போகும் அநேக கிறிஸ்தவர்கள் உள்ளூர் ஐக்கியத்தில் அங்கமாயிருக்கிறதின் விழிப்புணர்வோடு இருக்கிறார்கள். ஒன்று சேர்ந்து பொதுவாக விசுவாசிகள் கூடி ஆராதிக்கும் ஆராதனையை அனுபவிக்கிறார்கள் – ஒருசிலர் வீட்டு சிறுகுழுக்களிலும் மற்றவர்கள் பெரிய பொது இடங்களிலும் இதை அனுபவிக்கிறார்கள் (எபி. 10:25). இது நல்லதுதான். ஆனால் தேவனில் தனிப்பட்ட முறையில் வளரும் ஒரு பகுதியாக, ஒவ்வொரு விசுவாசியும் தனிப்பட்ட ஆராதனையின் அம்சத்தையும் பழக்கிக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட பக்தி தியான நேரம் என்பது தேவனிடம் நெருங்கிச் சேரும் நேரமட்டுமல்ல, ஆனால் கர்த்தருக்கு நம்மை கொடுக்கும் நேரமாகவும் இது அமைய வேண்டும். அந்தியோகியா திருச்சபையிலே ஒருசில தலைவர்கள் ஒன்று சேர்ந்து உபவாசித்து தேவனுக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தனர் (அப். 13:2). கர்த்தரிடத்திலிருந்து ஏதோ ஒன்றை அவர்கள் கேட்கவில்லை, ஆனால் தங்களது வாழ்வை ஜீவ பலிகளாக கொண்டுவந்து, கர்த்தருக்கு துதியையும் ஆராதனையையும் செலுத்தினார்கள்.

பழைய ஏற்பாட்டில் பலவகைப்பட்ட வித்தியாசமான காணிக்கைகளை இஸ்ரவேலர் கர்த்தருக்குக் கொண்டு வரவேண்டியிருந்தது. அவர்கள் பாவம் செய்தபொழுது கண்டிப்பாக செலுத்த வேண்டிய காணிக்கைகள் இருந்தன: குற்ற நிவாரண பலி மற்றும் பாவ நிவாரண பலி (லேவி. 4:2–3; 5:1–6; 6:25; 7:1–2). கர்த்தருக்கு ஸ்தோத்திர பலியாக உற்சாக காணிக்கைகளை சமாதான பலியை செலுத்த வேண்டும் (லேவி. 7:11–18). தகன பலி கர்த்தருக்கு கட்டாயமாகச் செலுத்த வேண்டிய துதி மற்றும் ஆராதனையைப் போன்றதாகும்; அதன் அக்கினி ஒருபோதும் அவிந்துபோகக் கூடாது (லேவி. 6:9–13). இந்த எல்லா பலிகளும் கிறிஸ்துவிலே நிறைவேறிவிட்டன. ஆனால் அதற்குப் பின்னால் உள்ள கொள்கைகள் இன்னும் நிலைத்திருக்கின்றன. கண்டிப்பாக செலுத்த வேண்டிய துதி ஆராதனையின் கொள்கைகளும், உற்சாக ஸ்தோத்திர பலியின் கொள்கைகளும் முக்கியமானவைகள்.

### *தேவனது பயங்கரமான பிரசன்னம்*

துதியும் ஆராதனையும் கட்டாயமான கொள்கையின் பகுதியாக ஏன் இருக்க வேண்டும்? பழைய ஏற்பாட்டில் பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே தன்னைப் பாதுகாக்கும் தூபவர்க்க மேகம் இல்லாமல் ஒருபோதும் பிரவேசிக்கக் கூடாது (லேவி. 16:13). பாவ நிவாரண பலியும் சர்வாங்க தகனபலியும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு தூபவர்க்க மேகத்தினால் பிரவேசிக்கும் முன்பு முதலாவதாக செலுத்தப்பட்டே ஆக வேண்டும் (லேவி. 16:3). இது இயேசுவின் குற்ற நிவாரணபலியின் மூலமும் (பாவ நிவாரண பலி) ஸ்தோத்திர துதி மற்றும் ஆராதனையின் மூலமும் (சர்வாங்க தகனபலி) தேவ பிரசன்னத்திற்குள் செல்வதை அடையாளமாகக் காட்டுகிறது. கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் பலிபீடத்தின்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

மேலுள்ள நெருப்புத்தனலினால் தூப மேகம் உண்டாக்கப்பட்டு, துதி மற்றும் ஆராதனையின் அடையாள போர்வையாக, பயங்கரமான தேவ பிரசன்னத்திலிருந்து பிரதான ஆசாரியனை பாதுகாக்கிறது. துதி மற்றும் ஆராதனை தேவனுடைய பிரயோஜனத் திற்காகவே என்று நாம் நினைக்கலாம். ஆனால் உண்மையாகவே அது நம்மை பாதுகாக்கும் பிரயோஜனமாயுள்ளது. உலக மாம்ச சரீரத்திலுள்ள நம்மெல்லாரையும் கொன்றுவிடும் பயங்கரமான தேவ பிரசன்னத்திலிருந்து நம்மை பாதுகாக்கும் போர்வையாயுள்ளது. தூப மேகத்தினால் பாதுகாக்கப்படாதிருந்தால், பிரதான ஆசாரியன் சாகக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டிருந்தார் (லேவி. 16:13).

எந்த மனிதனும் தேவ முகத்தைக் கண்டு உயிரோடு இருக்க முடியது என்று தேவன் மோசேக்கு சொல்லி இருந்தார் (யாத். 33:20). ஒரு நண்பனைப் போல மோசே தேவனோடு முக முகமாய்ப் பேசினார் என்று வேதத்தில் எழுதி இருந்தாலும், அதே அதிகாரத்திலிருந்தும், அதன் சூழ்நிலையிலிருந்தும், மோசே பார்த்த அதி உயர்வான மகிமை, தேவ மகிமையின் பின் பகுதியில் காணப்பட்ட மிகவும் சிறிய ஒரு நொடி நேரக்காட்சியே என்று சொல்ல வேண்டும் (யாத். 33:11, 18–23). உடன்படிக்கை பெட்டியில் இருந்த தேவனது வெளிப்படுத்தப் பட்ட பிரசன்னம் மிகவும் அதிவல்லமையுள்ளதாயிருந்ததால், அறியாமல் படும் வெறும் தொடுதல் ஒரு மனிதனையே கொல்லக்கூடியதாயிருந்தது (2 சாமு. 6:7–8). பெலிஸ்தியர்கள் உடன்படிக்கைப் பெட்டியை சிறைபிடித்து தங்களது பட்டணத்தில் வைத்திருந்தபொழுது, அந்த முழு பட்டணமும் மகாபெரிய அழிவினால் அடிக்கப்பட்டது (1 சாமு. 5:9). அதே நேரத்தில் தேவனது வெளிப்படுத்தப்பட்ட பிரசன்னத்தை மதித்தவர்கள் அவரது பிரசன்னத்தில் வரவேற்கப்பட்டு, மிகவும் அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டார்கள் (2 சாமு. 6:11–12; 1 நாளா. 13:14).

தேவன் தனது மக்களின் துதிகளுக்கு மத்தியில் வாசம் செய்கிறார் (சங். 22:3). வானங்களும் வானாதி வானங்களும் தேவ நிறைவைக் கொள்ளாது. முழு உலகமும் தேவனுக்கு வெறும் பாதபடியாகவே உள்ளது. (1 இராஜா. 8:27; 2 நாளா. 2:6; 6:18; ஏசா. 66:1). தேவன் தனது பிரசன்னத்தை பரலோகத்தின் நிறைவோடு இங்கு கொண்டுவந்தால், முழு உலகமும் அழிந்து போய்விடும். நாம் எந்த அளவு ஸ்தோத்திரம், துதி மற்றும் ஆராதனையினால் நம்மை சூழ்ந்து போர்த்துக்கொள்ள முடிகிறதோ *அதன் நேரடி விகிதத்தில்தான்* தேவன் தனது பிரசன்னத்தின் அளவாக வெளிப்படுத்துகிறார். கர்த்தர் கட்டளையிட்ட பல்வேறு வகையான பலிகளை ஆரோன் செலுத்தும்படி சொல்லப்பட்டது. *அதன் பிறகு* கர்த்தருடைய மகிமை அவனுக்கு தோன்றும் (லேவி. 9:6). ஆசரிப்புக் கூடாரத்தின் எல்லா பணிமுட்டுகளையும் மோசே கிரமமாக வைத்து *முடித்த பின்பு* தான் மோசே உள்ளே செல்ல முடியாத அளவுக்கு மிகவும் அதிக அளவு தேவ மகிமை தோன்ற ஏதுவாயிற்று (யாத். 40:33–38). வாத்தியங்களை வாசிப்பவர்களும் பாடகர்களும் ஒரே சத்தமாய் ஸ்தோத்திரத்தோடும், துதியோடும் கர்த்தரை ஆராதித்தபோது, கர்த்தர் தனது மகிமையை வெளிப்படுத்தினார் (2 நாளா. 5:13–14).

பயங்கரமான தேவ பிரசன்னத்திற்காக ஜனங்கள் கதறி அழும்போது, தாங்கள் என்ன கேட்கிறார்கள் என்று அநேகருக்கு தெரிவதில்லை. அவர்களின் வாழ்வை உயிரோடு வைப்பதற்காக தேவ இரக்கத்தினால் மட்டுமே, தேவன் தனது பிரசன்னத்தை வெளிப்படுத்தாமல் தக்கவைத்துக்கொள்கிறார். ஸ்தோத்திரம், துதி மற்றும் ஆராதனை சூழ்நிலையின் நேர்விகிதத்திலேயே தேவன் தனது பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார். மகா பரிசுத்த ஸ்தலத்திலே வெளிப்படுத்தப்பட்ட தேவ பிரசன்னத்தின் ஆலயத்தில் பழைய ஏற்பாட்டு ஜனங்கள் அணுகினபோது, அவர்கள் (வெளிப்பிரகாரத்தின்) வாசல் வழியாக ஸ்தோத்திரங்களோடும் பரிசுத்த ஸ்தலத்தில் (பிரகாரம்) துதியோடும் பிரவேசிக்கும்படி அவர்களுக்கு சொல்லப்பட்டது (சங். 100:4).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

வெளிப்படுத்தப்பட்ட தேவ பிரசன்னத்தின் இந்தக் கொள்கைகளை விளங்கிக் கொண்டு, ஒவ்வொரு நாளும் நமது வாழ்வில் தேவ பிரசன்னம் தங்கி வசிக்க நாம் விரும்புவோமானால், நம்மை சுற்றிலும் ஸ்தோத்திரம் துதி, ஆராதனையின் சூழ்நிலையை நாம் உருவாக்க *வேண்டும்.* புதிய ஏற்பாட்டில் நாம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாயிருக்கிறோம். வெளிப்படும் தேவ மகிமைக்காக நமக்கு மிகப்பெரிய திறன் உண்டாயிருக்கிறது (1 கொரி. 3:16–17); 2 கொரி. 3:7–9). அவரது திருச்சபை அவரது மகிமையின் தங்குமிடமாகவும் வாசஸ்தலமாகவும் இருப்பது தேவ சித்தமாயிருக்கிறது (எபே. 1:23; 2:21–22; 3:19–21). ஆராதனைக்காக விசுவாசிகள் இணைந்து ஒற்றுமையாக வந்து இவ்விதமாக வெளிப்படுத்தப்பட்ட தேவ பிரசன்னத்தை உருவாக்குவதோடு, நாம் தனிப்பட்ட முறையில் நம்மைச் சுற்றிலும் துதி ஆராதனையின் மேகத்தை உண்டாக்கவும் வேண்டியதேவையில் உள்ளோம். அதன் திறவுகோல் ஸ்தோத்திரம் துதி ஆராதனையின் வாழ்வில் நாம் வாழ்வதில் உள்ளது.


புதிய உடன்படிக்கையில் நாம் ஒவ்வொரு காரியங்களுக்காகவும் ஸ்தோத்திரம் செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்; இயேசுகிறிஸ்துவில் இதுவே நமக்கான தேவ சித்தமாயிருக்கிறது (1 தெச. 5:18). நமது எல்லா ஜெபங்களும் ஸ்தோத்திரத்தோடு சேர்த்து ஏறெடுக்கப்பட வேண்டும் (பிலி. 4:6). அப்பங்களுக்காகவும் மீன்களுக்காகவும் இயேசு ஸ்தோத்திரம் செலுத்தின பிறகு, அவைகள் அற்புதமாக பெருகி ஆயிரக்கணக்கான ஜனங்களை அது போஷித்தது; மீதியானவைகள் ஐந்தப்பம் இரண்டு மீன்களைக் காட்டிலும் மிகவும் அதிகமாயிருந்தது (மத். 15:36; மாற். 8:6; யோவா. 6:11). அற்புதங்களை பதிவு செய்த போது, கர்த்தர் ஸ்தோத்திரம் செலுத்தின *பிறகு* அவர்கள் அப்பம் சாப்பிட்டதாக யோவான் விசேஷமாக குறிப்பிடுகிறார் (யோவா. 6:23). பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபொழுது, அவர்கள் ஜெபித்து தேவனுக்குப் பாடல்களை பாடினார்கள். அற்புதமாக இயற்கைக்கு அப்பாற்பட்ட பூமியதிர்ச்சி சிறைச்சாலையை உலுக்கினது. அவர்கள் கட்டுகளெல்லாம் கழன்று போயின (அப். 16:25–26). எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரை ஸ்தோத்தரித்து துதி செய்வதை அலட்சியம் செய்யும்பொழுது, விசுவாசிகள் எத்தனை அதிசங்களையும் அற்புதங்களையும் இழந்துபோகிறார்கள் என்பதை கற்பனை செய்துபாருங்கள்.

நன்றி சொல்லுதல் அல்லது ஸ்தோத்திரம் (eucharisto) என்ற வார்த்தை இரண்டு கிரேக்க வார்த்தைகள் *யு eu* மற்றும் *காரிஸ் charis* என்பவைகள் ஒன்று சேர்வதேயாகும். *காரிஸ் charis* என்பது கிருபை என்றும் *யு eu நல்ல, சிறப்பான* அல்லது *பிரியமான* என்று பொருள்படும் என்பதை நாமறிவோம் (உதாரணமாக, *சுவிசேஷம்* அல்லது *நற்செய்தி* – யுவாங்கிளியான் euangelion – நல்ல செய்தி). கிருபையின் நன்மை நம்மேலும் நம்மூலமாகவும் பாய்ந்து செல்வதாகும். பெற்றுக்கொள்வதும், நம் வாழ்வின் மூலமாக கிருபை பாய்ந்து செல்வதும் ஆகிய இரண்டும், ஸ்தோத்திரம் செலுத்துதல், துதி மற்றும் ஆராதனையோடு சேர்ந்துதான் வரும். தேவ கிருபையினால் நன்மை அடைபவரும் அல்லது தேவ கிருபையால் நிரப்பப்படுபவரும், இயற்கையாகவே நன்றி சொல்பவரும் தேவனை ஆராதிப்பவருமாகவே இருப்பார். ஒரு நபர் அல்லது நபர்கள் மேல் தேவ கிருபை இருக்கிறதா என்பதன் முக்கிய அடையாளமே இதுதான் – நன்றி சொல்லும் சூழ்நிலையினால் அவர்கள் நிரப்பப்பட்டவர்களாயிருப்பார்கள். அதுமட்டுமல்லாமல் இன்னும் பெருகின அளவு கிருபையை பெற்றுக்கொள்ளவும் அது அத்தியாவசியமானதாக இருக்கிறது.

மகிழ்ச்சி என்ற வார்த்தையும் கூட (காரா chara – களிகூருதல், களிப்பு) கிருபை என்ற வார்த்தையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது (இன்பமாக்குவதெதுவோ, சந்தோஷ நிலை, நல்ல எதிர்காலத்தின் 'தயவு', தேவ தயவு *கைரோ chairo* என்ற வார்த்தையின் மூல அர்த்தத்தில் இருந்துதான் வந்துள்ளன. ஒவ்வொரு காரியத்திற்காகவும் ஸ்தோத்திரம் செலுத்துங்கள்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

என்று பேசுமுன்பு, பவுல் தெசலோனிக்கேயரை *எப்பொழுது களிகூரும்படியும்* இடைவிடாமல் ஜெபம்பண்ணும்படியும் கூறுகிறார் (1 தெச. 5:16–18). தொடர்ந்து களிகூருதல், தொடர்ந்து ஜெபித்தல், தொடர்ந்து நன்றி சொல்லுதல், துதித்தல் மற்றும் ஆராதித்தல் – எவ்வளவு வல்லமையுள்ள கூட்டான இணைப்பு! இப்படிப்பட்ட சூழ்நிலையால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தங்களை அனுதினமும் சூழ்ந்துகொள்ள வேண்டும். மேற்சொன்ன எல்லா கிரேக்க வார்த்தைகளையும் அவைகளின் மூல அர்த்தத்தை ஒன்று சேர்த்தால், நாம் கீழ்க் காணும் ஒரு சுழற்சியை காண முடியும்.




ஒவ்வொரு நாளும் நாம் நமது சுயசித்தத்தை பயிற்சிவித்து, களிகூரவும் தேவனுக்கு நன்றி சொல்லவும் தேர்வு செய்யும்போது, நாம் கிருபை மற்றும் களிகூரும் நிலைக்கு கடந்து செல்கிறோம். அவைகள் தொடர்ந்து மகிழ்ச்சியை உண்டாக்குகிறது; அதன் பலனாக நாம் களிகூர காரணமாகிறது. அதன் பிறகு அந்த சுழற்சி பெருகுகிறது. சில நேரங்களில் பல நிலைகளில் கிருபையின் இந்த சுழற்சியில் பாய்ந்து செல்லும் மக்களோடு நாம் ஐக்கியம் கொள்ளும்போது, அவர்கள் வாழ்வில் உள்ள கிருபையினால் நாமும் ஒரு குறிப்பிட்ட அளவு கிருபையை பெற்றுக்கொள்கிறோம். அவர்களும் பெற்றுக்கொள்கிறார்கள். தொடர்ந்து இப்படிப்பட்ட சுழற்சிகளை நம் வாழ்வில் பெருக்கிக் கொள்வதிலிருந்து, கிருபை பெருகுகிற நமது வாழ்வில் ஸ்தோத்திரம், துதி ஆராதனையின் ஆவிக்குரிய சூழ்நிலையை உருவாக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் தனது பிரசன்னத்தையும் தனது கிருபாவரங்களையும் (சிறிய சிறிய கிருபைகள்) வெளிப்படுத்த முடிகிறது. அப்போஸ்தலர்கள் மேல் மிகப்பெரிய கிருபை இருந்தபோது, பெரிதும் வல்லமையான அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்றன. பேதுருவின் நிழல்கூட வல்லமையான சுகங்களை கொண்டுவந்தது (அப். 4:30, 33; 5:12–16). கிருபையில் நாம் பெருகி வளரும்போது, அநேக நல்ல கிரியைகளைச் செய்ய நாம் மகா பெரிய செழிப்பில் வளர்ந்து பெருகுகிறோம் (2 கொரி. 9:8). பவுலினுடைய மிஷனரி பிரயாணங்களின் அடித்தளமாயிருந்த அந்தியோகியா சபையானது, தேவ கிருபையினால் ஒரு வல்லமையான எழுப்புதலையும் சபைவளர்ச்சியையும் சந்தித்து உறுதிப்படுத்தப்பட்டது (அப். 11:21–22).

கிருபை, நன்றி செலுத்துதல், துதி மற்றும் ஆராதனை நமது வாழ்வை சூழ்ந்து, அதுவே சூழ்நிலையாக மாற்றப்பட, நாம் நமது தனிப்பட்ட ஆராதனை நேரத்தைக் கண்டுபிடிக்க

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பழகிக்கொள்ள வேண்டும். இந்த சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள உதவியாக இசை இருந்தாலும், தாவீது செய்ததைப்போல ஒவ்வொருவரும் இசைக்கருவியை வாசிக்க இயலுவது இல்லை (1 சாமு. 16:16, 23; 2 சாமு. 23:1–2). எலிசா தனக்குத்தானே இசைக் கருவியை வாசித்தவரல்ல. ஆனால், துதி ஆராதனையின் சூழ்நிலையை உருவாக்கும் முக்கியத்து வத்தை அறிந்தவராய், தேவ பிரசன்னம் வெளிப்படுத்தப்பட, வழியை ஆயத்தமாக்க உதவியாக, இசைவாசிப்பவன் ஒருவனை அழைத்தார் (2 இராஜா. 3:15–16). மற்ற நேரங்களில், சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், ஆவிக்குரிய பாடல்களையும் நாம் பாட முடியும் (கொலோ. 3:16). கிருபையோடு இனிய கீதங்களை நமது இருதயத்தில் பாடுவது, நமது வாழ்வைச் சுற்றி துதி மற்றும் ஆராதனையின் சூழ்நிலையை உருவாக்கும் (கொலோ. 3:16; எபே. 5:19). தாலந்து பெற்ற இசை வல்லுனர்களாக நாம் இராவிட்டாலும், நமக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட தேவ கிருபையிலிருந்து, நமது இருதயங்களில் நம்மெல்லாருக்குமே இனிய பாடல்கள் உள்ளன. காலையிலும், மத்தியானத்திலும், இரவிலும் தேவ ஆவியானவர் நமது இருதயத்தில் தூண்டும், இனிய பாடல்களை வாயைத் திறந்து அல்லது அமைதியாகப் பாடி வெளிப்படுத்தலாம். இந்த அடித்தளத்திலிருந்து ஆவியானவரின் மற்ற அநேக வேலைகள் நமது வாழ்வில் விடுவிக்கப்படும்.

*நமது கைகளை உயர்த்துதல்*

நமது தனிப்பட்ட ஆராதனை வாழ்விலுள்ள இன்னொரு முக்கிய செயல்முறையானது, நமது கைகளை அர்ப்பணிப்பு, துதி ஆராதனையின் அடையாளமாக தேவனுக்கு நேராக உயர்த்துவதாகும். ஆராதனையில் தேவனுக்கு முன்பாக முழங்கால் போடுவதற்கும் தலை வணங்குவதற்கும் நேரமும் இடமும் உண்டு. ஆனால் தேவனை நோக்கி ஜெபிக்கும் ஜெபத்தில் நமது கைகளை உயர்த்தும்படி பவுல் நமக்கு புத்திசொல்கிறார் (மத். 28:9; வெளி. 5:14; 7:11; 1 தீமோ. 2:8). நமது கைகளை உயர்த்துவது மாலைப் பலியைப் போன்றது (சங். 141:2). கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் கைகளை உயர்த்துவதை தாவீது குறிப்பிடுகிறார் (சங். 28:2; 63:4; 119:48; 134:2). கைகளை உயர்த்துவதின் மூலமாக, ஆசீர்வதிக்கும் முறை செயல்பட்டது (லேவி. 9:22). பாதை கடினமாகவும் கஷ்டமாகவும் இருக்கும்போது, கர்த்தருக்கு நமது கைகளை உயர்த்தும்படி புத்தி சொல்லப்படுகிறோம் (சங். 63:1–4; எபி. 12:12). தனது சீஷர்களோடு இயேசு கடைசியாக செய்தது, அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, தனது கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார் (லூக். 24:50–51).

மோசேயின் காலத்தில் அமலேக்கியரோடு நடந்த யுத்தத்தில், யோசுவாவின் வெற்றியானது மோசே பிடித்திருந்த தேவனுடைய கோல் உயர்த்தப்படுவதை சார்ந்திருந்தது (யாத். 17:8–16). மோசேயின் கரங்கள் சோர்ந்துபோய் கீழே வந்த ஒவ்வொரு முறையும், அமலேக் மேற்கொண்டான். ஆனால், அவன் தன் கைகளை உயர்த்தினபோது யோசுவா மேற் கொண்டான். அமலேக்கு முற்றிலும் நிர்மூலமாக்கப்படும் மட்டும் மோசேயின் கரங்களை உயர்த்திப்பிடிக்க ஆரோனும் ஊரும் மோசேக்கு உதவி செய்தார்கள். அந்த வேளையிலே யாவே நிசி Yahweh Nissi – கர்த்தர் நம்முடைய ஜெயக்கொடி (அல்லது வெற்றி) என்ற மீட்பின் இன்னொரு பெயரையும் தேவன் மோசேக்கு வெளிப்படுத்தினார். இயற்கையிலே மோசேயின் உயர்த்தப்பட்ட கைக்கும், கீழே தரையிலே நடைபெற்ற உண்மையான யுத்தத்திற்கும் இடையே எந்த ஒற்றுமையும் இல்லை. ஆனால், ஆவிக்குரிய மண்டலத்தில், தேவ நாமம் உச்சரிக்கப்பட்டு உயர்த்தப்படுவதால், தேவ ஜனம் பெலப்படுத்தப்பட்டு, தேவ அபிஷேகம் தேவ ஜனத்தின்மேல் வந்தது.

மாலையில் தகனபலி செலுத்தும் நேரத்தில் தூதனாகிய காபிரியேல் தானியேலுக்கு தோன்றினது, அதன் அடையாள அர்த்தத்தில் சுவாரசியமானது (தானி. 9:21). தூபங்காட்டும் நேரத்தில் சகரியாவுக்கு தேவதூதன் தரிசனமான நேரமும் குறிப்பிடத்தக்கதே (லூக். 1:9–11). ஒரு நாளில் ஏழு முறை கர்த்தரை துதிப்பதாக தாவீது பகிரங்கமாக அறிவிக்கிறார் (சங். 119:164). நமது கரங்களை உயர்த்துவது மாலைபலி அல்லது அந்திப்பலியைப்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

போலிருப்பதால், அதோடு புதிய உடன்படிக்கையில் நாமே பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாயிருப்பதாலும், நாம் ஒரு நாள் முழுவதிலும் நேரத்திற்கு நேரம் அடையாளமாக நமது கரங்களை உயர்த்த இயலுவதோடு (தனிப்பட்ட துதி ஆராதனை நேரங்களிலும்) அவருடைய நாமத்திற்கே தகுதியான செலுத்த வேண்டிய துதியையும் ஆராதனையையும் தேவனுக்கு செலுத்த வேண்டும். இருதயம் தான் சரியாக இருக்க வேண்டும். ஆனால், கைகளை உயர்த்துவதினால் உணரும் முறை எளிமையானதும், பார்ப்பதற்கு விருப்பமானதுமாய் இருக்க வேண்டும். தேவனைத் துதிக்க உங்கள் கரங்களை உயர்த்தி, உங்களது தனிப்பட்ட ஆராதனை நேரத்தில், அவருக்கு துதி ஆராதனை பலியை செலுத்துங்கள் (உங்கள் ஸ்தல சபையின் நடைமுறை அவ்விதமாக இருக்குமானால், பொதுவாக கூடுகையிலும் அப்படிச் செய்யுங்கள்). ஒவ்வொரு நாளிலும் மிகவும் அலுவலாயிருந்தாலும், சில நிமிஷங்கள் ஒதுக்கி, தாவீதைப்போல ஏழு முறை உங்கள் கைகளை உயர்த்தி தேவனுக்கு துதி ஆராதனை செலுத்துங்கள்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *அத்தியாயம் 4*

# தனிப்பட்ட வேத பாடம்

ஒவ்வொரு புதிய கிறிஸ்தவனும் வேதத்தை வாசிக்க உற்சாகப்படுத்தப்படுகின்றனர். ஆனால், வேதத்தை கற்றுக்கொள்வதைப் பற்றி மிகவும் குறைவாகவே போதிக்கப்படுகின்ற னர். முழு வேதாகமத்தையும் வாசிப்பது மிகச்சிறந்த திட்டமாயிருக்கும். ஆனால், புதிய விசுவாசிகள் முதலாவது புதிய ஏற்பாட்டை ஆரம்பிக்க பரிந்துரை செய்கிறேன். ஆரம்பிப்பதற்கு நல்ல இடம், யோவான் சுவிசேஷம் அல்லது மாற்கு சுவிசேஷமாகும். சுவிசேஷங்களில் நல்ல பழக்கப்பட்ட பின்பு, அப்போஸ்தலர் நடபடி புஸ்தகத்தை வாசிக்க முற்படலாம். சபைகளின் மற்ற அப்போஸ்தலர்களுடைய நிருபங்களை பிறகு வாசிக்கிலாம். பல முறை புதிய ஏற்பாட்டை நீங்கள் வாசித்த பிறகு, அங்குள்ள நிகழ்வுகளைப் பற்றி நன்கு அறிந்துகொண்ட பிறகு, வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டை வாசிக்க ஆரம்பிக்கலாம். பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் மொத்தமாக 1,189 அதிகாரங்களும் 31,273 வசனங்களும் உள்ளன – 8,07,361 வார்த்தைகள் (ஆங்கிலத்தில்) உள்ளன. நீங்கள் ஒரு நாளுக்கு 3.25 அதிகாரங்கள் வாசித்தால், வேதாகமம் முழுவதையும் வருடத்தில் ஒரு முறை வாசிக்க முடியும்.

*வேதாகமத்தின் சுருக்க வரலாறு*

ஜான் விக்ளிப் (சுமார் 1380 கி.பி.) வேதாகமத்தை மூலபாஷையாகிய எபிரேய மொழியிலும் (சில பகுதிகள் அரமேய மொழியிலும்), கிரேக்க மொழியிலுமிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஜான் பர்வே என்ற அவரது உதவியாளரால் அது திரும்ப சரிபார்க்கப்பட்டு கி.பி. 1388ல் வெளியிடப்பட்டது. அது முதற்கொண்டு அநேக ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளிவந்தன. அவைகளில் கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு 1611 மிகவும் புகழ்பெற்றதாகும். வேதத்திலுள்ள அதிகாரங்களும் வசனங்களும் தெய்வீக ஏவி எழுப்புதலால் எழுதப்பட்டது அல்ல (அதிகாரங்களின் எண்களும் வசனங்களின் எண்களும் மூல எழுத்துப்பிரதிகளில் இல்லை). எனவே, ஏவி எழுப்பப்பட்ட எழுத்தாளருடைய முழு அர்த்தத்தையும் நீங்கள் புரிந்து கொள்ள, அதிகாரங்கள் மற்றும் வசனங்களின் பிரிவுகளையும் கடந்து, சில வேளைகளில் நீங்கள் வேதத்தை வாசிக்க வேண்டியிருக்கும்.

படிப்பதற்கும், ஆராய்சியாளர்கள் அலசி ஆராய்ந்து பார்ப்பதற்கும் உதவியாக, சில நூற்றாண்டுகளுக்கு முன்புதான் அதிகாரங்கள் மற்றும் வசனங்களின் பிரிவுகள் உண்டாக்கப்பட்டன: (சுமார் கி.பி. 1236) கார்டினல் ஹா–கோ டி சேங்க்டோ–கேரோ மற்றும் ஸ்டீபன் லாங்டன் (1150–1228). கேன்டர்பெரியின் தலைமை பிஷப் ஒவ்வொருவரும் தனித்தனியாக வேதத்தை அதிகாரங்களாக பிரித்துப் பகுத்தார்கள். ஆனால், இந்நாட்களில் பயன்படுத்தப் படும் நவீன அதிகார பகுப்புகள், 1205ல் வல்கேட் (லத்தீன்) பதிப்பில் வெளியிடப்பட்ட ஸ்டீபன் லாங்டன் என்பவரால் செய்து முடிக்கப்பட்டதாகும். ரபாய் மொர்தெகாய் நாத்தன் கி.பி. 1448ல் பழைய ஏற்பாட்டை வசனங்களாக பிரித்து பகுத்தார். ஸ்டிபேனஸ் என்று அறியப்பட்ட ராபர்ட் எஸ்டியன் என்ற அச்சடிப்பவர் (ஸ்விட்சர்லேன்டிற்கும் பிரான்சிற்கும் இடைய குதிரை மீது சென்றபோது என்று சொல்லப்படுகிறது) சுமார் கி.பி. 1551ல் புதிய ஏற்பாட்டை வசனங்களாக பிரித்து பகுத்தார்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

(அந்த வருஷத்தில் தான் கிரேக்க புதிய ஏற்பாட்டை அவர் வெளியிட்டார்; 1470–1541 சாண்டி பக்னினி என்ற இத்தாலிய ஆராய்ச்சியாளரின் முந்தைய வசன பிரிவு பகுப்பு ஒருபோதும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படவில்லை).

இப்போதுள்ள புதிய ஏற்பாட்டு கேனன் (வேதாகமம் உருவாக்கப்பட பகுதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட புத்தகங்கள்). ஆரம்ப சபை வரலாற்றின் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு நிதானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. கி.பி. 327ல் (நிசேயா கவுன்சிலுக்கு இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு) யுசெபியஸ், தீர்க்கமான புராதன விசுவாச பிரமாணத்தை கட்டாயமாக உலகமுழுவதிலும் நடைமுறைப்படுத்த முற்பட்டார். அதில் அவர் பரிசுத்த நான்கு பகுதிகள் (நான்கு சுவிசேஷங்கள்) நடபடிகள், 1 பேதுரு, 1 யோவான், பவுலின் எல்லா நிருபங்கள் (அலெக்சாந்திரியாவின் கிளமெண்ட் அவர்களின்படி எபிரேயர் நிருபமும் அடங்கும்), இவைகளோடு சர்ச்சைக்குரிய ஆனால் துர்உபதேசமற்ற யாக்கோபு, யூதா, 2 பேதுரு, 2 யோவான் மற்றும் 3 யோவான் இவைகளையும் சேர்த்துக் கொண்டார். தள்ளுபடி ஆகமங்களில் பாதி சர்ச்சைக்குரியவைகளாக ஒரு பட்டியலை தயாரித்தார் (பவுலின் நடபடிகள், ஹேமாசின் புத்தகம், பேதுருவின் வெளிப்பாடு, பர்னபாவின் நிருபம், எபிரேயர் களின் சுவிசேஷம், யோவானின் வெளிப்பாடு மற்றும் சில 'அப்போஸ்தலர்களின் போதனை'). அவர் போலிகளின் ஒரு பட்டியலையும் தயாரித்தார் (பேதுரு, தோமா, மத்தியாசின் சுவிசேஷங்கள் மற்றும் அந்திரேயா, யோவான் மற்றும் மற்றவர்களின் நடபடிகள்).

சுமார் கி.பி. 350ல் பிஷப் சிரில் என்பவர் பரிசுத்த வேத வாக்கியங்களாக அவர் கருதின புத்தகங்களின் பட்டியல்களை, எருசலேமிலுள்ள தனது சபைகளுக்கு அவர் கொடுத்த சொற்பொழிவில் உள்ளடக்கியுள்ளார். முதல் முறையாக சபையின் உயர் பதவியில், தலைமைத்துவத்தில் இருந்த ஒருவர், புதிய ஏற்பாட்டில் என்னென்ன புத்தகங்கள் இருந்த தென அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார் – வெளிப்படுத்தின விசேஷத்தை தவிர, இப்போதுள்ள புதிய ஏற்பாட்டு எல்லா புத்தகங்களும் அதில் அடங்கும். சுமார் கி.பி. 367ல் அலெக்சாந்திரியா பிஷப்பான அத்தெனாசியஸ் வெளிப்படுத்தின விசேஷத்தையும் சேர்த்து ஒரு பட்டியலை தனது விருந்து நிருபத்தில் (மேற்கத்திய கேனன் என்று அறியப்பட்டதை) முடிவுசெய்து அறிவித்தார். ட்ருல்லான் சினாடில்தான் அது அதிகாரப்பூர்வமானது. அது கி.பி. 692 வரையில் நடைபெறவில்லை. பழைய ஏற்பாட்டு கேனன் என்பது யூதர்கள் தங்களது தனக்கில் (யூதாயிசத்தில் பயன்படுத்தப்பட்ட வேதாகமம்) பயன்படுத்திய நிலையிலேயே எடுத்துக் கொள்ளப்பட்டது.

*வேதத்தின் மூலமாக முறையான வேதபாடம்*

ஒவ்வொரு புத்தகமாக அல்லது தலைப்புகளின் கீழ் அல்லது பரிசுத்த ஆவியானவரால் ஏவி எழுப்பப்பட்டு கொண்டுவரப்படும் சிந்தனைகளைப் பின்பற்றி (வெளிப்பாட்டினால் படித்தல்) வேதாகமத்தை முறைப்படி படிக்க முடியும். வேதாகமத்தை முறையாக நீங்கள் படிக்கும்போது, குறிப்பு எடுத்துக்கொள்வதற்கு ஏற்றவாறு வேதாகம பாட சிறப்பான நோட்டுப் புத்தகம் ஒன்று வைத்துக்கொள்வது நல்லது. புதிய விசுவாசிகள் புதிய ஏற்பாட்டை பூர்த்தியாக அறிந்து கொள்ளும்வரை முறையாக வாசிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டை அவர்கள் வாசித்து படிக்கும் முன்பு, விசேஷமாக சுவிசேஷங்களை வாசிக்க வேண்டும்.

முறையான வேதாகம பாடப்படிப்பில் குறிப்புகள் எடுக்கையில், உங்களது ஏவி எழுப்பப்படும் தனிப்பட்ட சிந்தனைகளிலிருந்து நீங்கள் வேதாகம குறிப்புகளை பிரித்தெடுக்க முடியும். வேதத்தை முறையாக நீங்கள் வாசிக்கும்போது, பின்பற்ற வேண்டிய முறைகள் அல்லது கொள்கைகள் தாங்களாகவே காணக்கூடியவைகளாக வெளிப்பட்டு நீங்கள் உற்று நோக்கியவைகள்தான் வேதாகம குறிப்புகள் எனப்படும். உதாரணமாக சுவிசேஷங்களை நீங்கள் வாசிக்கையில் சுவிசேஷங்கள் முழுவதிலும் இயேசு கையாண்ட பின்பற்றக்கூடிய சில வார்த்தை முறைகள், சொற்றொடர், கொள்கை, போதனை, முறை அல்லது நடை

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

இவைகளை நீங்கள் உற்றுநோக்கி இருக்கக்கூடும், அல்லது திரும்ப திரும்ப வரும் சில சொற்றொடர்கள் அல்லது திறவுகோள் வார்த்தைகள் அல்லது கொள்கைகள் இவைகள் ஒரு பகுதிக்குள்ளே அல்லது பல அத்தியாயங்களுக்குள்ளே திரும்ப திரும்ப வரலாம். இது உங்களது சொந்த வேத பாடப்படிப்பில், வேதத்தின் பொருளடக்கத்தைப் பற்றிய உங்களது தனிப்பட்ட கருத்துக்களை உருவாக்கிக் கொள்ள உதவுகிறது.

மற்ற அநேகர் வேதத்தை ஆராய்ந்து படித்து, அதில் தாங்கள் கண்டவைகளை (வேதாகம விளக்கவுரைகள்) தங்களது சொந்த புத்தகங்களையும் சுருக்க வர்ணனைகளையும் எழுதி யுள்ளனர். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் ஏவி எழுப்புதலால் வேதத்தை வாசிக்கும் ஒவ்வொரு நபரும், மற்றவர்கள் இதற்கு முன் ஒருபோதும் கண்டிராதவகையில், வேதத்திலே அபூர்வமானதும் புதிய விஸ்தீரணமானவைகளையும் காண்பார்கள். ஒவ்வொரு முறையும் நான் வேதத்தை வாசிக்கும்போது, முன் எப்பொழுதுமே கண்டுபிடித்திராத புதுமையானதும் புதிய துமானவைகளை அப்பகுதிகளிலே கண்டிருக்கிறேன். ஒத்தவாக்கிய அகராதியைக் கொண்டு வேதத்தை முறையாக, ஒவ்வொரு தலைப்புகளின் கீழும் படிக்க முடியும். பட்டியலிலே ஒரு குறிப்பிட்ட தலைப்பை நீங்கள் தெரிந்துகொண்டு, அந்த குறிப்பிட்ட தலைப்பின் கீழ் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை வேதாகமம் அவைகளைப்பற்றி என்ன சொல்லுகிறது என்பதை படித்து விளக்கி கொள்ள முடியும்.

ஏவி எழுப்பப்பட்ட குறிப்புகள் என்பவைகள், உங்களது வாழ்வின் தற்போதைய சூழ்நிலை யைப் பற்றி, எழுதப்பட்ட வேதவார்த்தையிலிருந்து உங்களை நோக்கி குதித்து எழுந்து வரும் வேதவாக்கியங்கள் அல்லது சொற்றொடர்களாகும். இயேசு பேசின வார்த்தைகளை, பரிசுத்த ஆவியானவர் ஞாபகத்திற்கு கொண்டுவருவார் என, இயேசுவே சொல்லியுள்ளார் (யோவா. 14:26). வேதவாக்கியப் பகுதியின் சூழ்நிலையிலிருந்து, சிலவேளைகளில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் மற்ற நேரங்களில் ஆண்டவரிடத்திலிருந்து *ரேமா* (பேசப்பட்ட) வார்த்தையாக, அது தனியாக நிற்பது போல தோன்றும். மற்ற முறைகளோடு இவைகளையும் மற்றவைகளோடு சேர்த்து குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். தேவன் உங்களோடு பேச பயன்படுத்தியவைகள், உங்களது தனிப்பட்ட அபூர்வமான வாழ்விற்கும் சூழ்நிலைக்கும் தேவ சத்தமாக உங்களோடு அவைகள் பேச ஆரம்பிக்கும்.

*வேதாகம உபகரணங்களையும் ஒத்த வாக்கியங்களையும் பயன்படுத்துதல்*

வேதாகம விளக்கவுரைகளை நான் பரிந்துரைக்கிறதில்லை. ஏனெனில், அவைகள் பெரும்பாலும் வேதாகமக் குறிப்புகளும், மற்றவர்கள் பல வேதாகம பகுதிகளில் காணும் யுத்திகளுமாகும். அவைகளில் சில வேதத்தின் ஒரு பகுதியை அலசி ஆராயும் பகுப்பாய்வை விட, அதிகமாக தனிப்பட்ட வாழ்வில் அப்பியாசிப்பதற்கு ஏற்றவைகளாகும் (ஒரு பகுதியை அலசி ஆராயும் பகுப்பாய்வு என்பது ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள்ளே இருக்கும். அந்தப் பகுதிக்கு வெளியேயுள்ள சூழ்நிலையிலிருந்து வரும் வியாக்கியானங்களை இதோடு சேர்க்காதிருப்பதாகும்) ஒரு வேதாகம விளக்கவுரையின் தரம், அந்த எழுத்தாளரு டைய வேத மூலபாஷைகளின் பாண்டித்தியம் மற்றும் அவரது ஆவிக்குரிய வாழ்வின் தரம் ஆகிய இவைகளைப் பொறுத்துத்தான் அமையும். சில நல்லதும் ஆவிக்குரிய மற்றும் வேத பகுதியின் விளக்கம் ஆழமுள்ளதாகவும் இருக்கும். ஆனால், மற்றவைகள் பல பிரச்சனை களைப் பற்றிய எழுத்தாளருடைய சொந்தக் கருத்துக்களின் தொகுப்பாகவே இருக்கும்.

எனவே, நான் பரிந்துரை செய்யும் வேதாகம உபகரணங்கள் என்னவெனில், ஒரு நல்ல ஒத்தவாக்கிய அகராதியும், நல்ல வேதாகம அகராதியும் மட்டுமே. சந்தையிலுள்ள இரண்டு முக்கிய ஒத்தவாக்கிய அகராதிகளில் ஒன்று, ஸ்ட்ராங்ஸ் ஒத்தவாக்கிய அகராதி மற்றது யங்ஸ் ஒத்தவாக்கிய அகராதி. ஒத்த வாக்கிய அகராதியின் முதல் பயன்பாடு, ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் நீங்கள் பார்க்க விரும்பும் வேத வசனம் ஒன்றை நீங்கள் கண்டு பிடிக்க முடியும். அல்லது, ஒரு வசனத்தின் ஒரு பகுதியை மட்டும் அரைகுறையாக

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஞாபகத்தில் வைத்திருந்தாலும், அந்த வசனம் வேதத்தில் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியும். அல்லது ஒரு வசனத்தின் ஒரு பகுதியை மட்டும் அரைகுறையாக ஞாபகத்தில் வைத்திருந்தாலும், அந்த வசனம் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியும். ஒரு ஒத்தவாக்கிய அகராதியின் மிக முக்கியமான பயன் என்னவெனில், மூல பாஷைகளிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள, எபிரேய கிரேக்க வார்த்தை களை கண்டுபிடிக்கும் ஆற்றலாகும். ஸ்ட்ராங்கின் அனுகூலம் என்னவெனில் ஸ்ட்ராங்கில் கொடுக்கப்பட்டுள்ள எண்களின் ஒழுங்காகும் (ஸ்ட்ராங் ஒவ்வொரு எபிரேய கிரேக்க வார்த்தைக்கும் ஒரு எண்ணைக் கொடுத்துள்ளார்). ஒரே மூல வார்த்தையிலிருந்து வந்துள்ள வார்த்தைகளுக்கு, ஸ்ட்ராங் வித்தியாசமான எண்களைக் கொடுத்திருந்தாலும், ஸ்ட்ராங்கின் ஒத்தவாக்கிய அகராதியில், மூல வார்த்தையை கண்டுபிடிக்க, நீங்கள் முதலாவது வேத வசனத்தைக் கண்டுபிடித்து, அதற்குப் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் எண்ணை கண்டுபிடித்த பிறகு, மூல எபிரேய கிரேக்க வார்த்தையை கண்டுபிடிக்க, ஒத்தவாக்கிய அகராதியின் பின்பகுதியில் இருக்கும் எண்ணிக்கை முறையை கவனிக்க வேண்டும்.

யங்கின் ஒத்தவாக்கிய அகராதி, வேறொரு முறையைப் பயன்படுத்துகிறது. அதில் ஒரு தலைப்பின் கீழ், எல்லா வசனங்களின் எல்லா எபிரேய கிரேக்க வார்த்தைகளும் அதே பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. எபிரேய மற்றும் கிரேக்க வார்த்தைகளுக்கு ரோம எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே ஆங்கிலத்தில் வாசிப்பவர்களுக்கு, வாசிப்பதில் எந்த பிரச்சனையும் இல்லை. அது மட்டுமல்லாமல் ரோம எண்களுள்ள எபிரேய கிரேக்க வார்த்தைகளுக்கு அர்த்தம் காட்டும் அகராதி, பின் பகுதியில் கொடுக்கப் பட்டுள்ளது. குறிப்பாக எபிரேய கிரேக்க வார்த்தைகளை ஆராய்ச்சி செய்ய விருப்பமுள்ளவர்களுக்கு, இது பிரயோஜனமாக இருக்கும். உதாரணமாக, *வல்லமை* என்ற வார்த்தைக்கு கீழே கவனித்தால், பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் உள்ள *வல்லமை* என்ற வார்த்தை கொண்ட எல்லா வசனங்களின் பட்டியலையும் காண முடியும். புதிய ஏற்பாட்டு பகுதியில் *வல்லமை* என்ற வார்த்தையின் வித்தியாசமான கிரேக்க வார்த்தைகளை நீங்கள் கவனிக்கலாம்: *Dunamis, Dunaton, Exousia, Ischus, Kratos* முதலியன. இப்பொழுது பின்பகுதியிலுள்ள ரோம எண்கள் கொடுக்கப்பட்டுள்ள ஒத்தவாக்கிய அகராதியின் பின்புற முள்ள கிரேக்க அகராதியை பார்த்து *dunamis* என்ற வார்த்தையின் கீழ் கவனித்தால், அந்தப் பட்டியலிலே ability$_1$, abundane$_1$, meaning$_1$, might$_4$, mighty deed$_1$, mighty work$_{11}$, miracle$_8$, power$_{77}$, முதலியவைகளை காணலாம். அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள எண்கள், அந்த வித்தியாசமான ஆங்கில வார்த்தைகளாக எத்தனை முறை *dunamis* என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கும்; அந்த வார்த்தைகளுள்ள வேத வசனங்களைக் கண்டுபிடிக்க, அந்த குறிப்பிட்ட தலைப்புகளுக்கு கீழே நீங்கள் கவனிக்க வேண்டும். இந்த முறையையும் ஒழுங்கையும் நான் அனுபவிக்கிறேன், எனவே யங்கின் ஒத்தவாக்கிய அகராதிக்கே முன் பயனுரிமை கொடுக்கிறேன்.

மேற்கண்ட ஒத்தவாக்கிய அகராதியை நீங்கள் பயன்படுத்தும்போது, நீண்டகாலங்களுக்கு முன்பே (கம்பியூட்டர்களின் காலத்திற்கு முன்பே) அவைகள் செய்து முடிக்கப்பட்டதை நினைவில் கொள்ளவேண்டும். அதுமட்டுமல்லாமல் அது பழைய கிங் ஜேம்ஸ் வெர்சனை அடிப்படையாகக் கொண்டே செய்து முடிக்கப்பட்டுள்ளது; எனவே சில நவீன மொழிபெயர்ப் புகளின் அதே வார்த்தைகளை உங்களால் காண முடியாது. வேதாகம மொழிபெயர்ப்பைப் பொறுத்த வரையில் 100% எனக்கு விருப்பமான ஒன்றை நான் இன்னும் கண்டு பிடிக்க வில்லை. சில நவீன மொழிபெயர்ப்புகள் உண்மையான அட்சர மொழிபெயர்ப்புகள் என்பதை விட, பெரும்பாலும் வியாக்கியானங்களாகவே உள்ளன. உதாரணமாக *பனியைப் போன்ற வெண்மை* என்ற சொற்றொடரை, பனியையே பார்க்காத உள்ளூர் மக்கள் விளங்கிக் கொள்ள வியாக்கியானப்படுத்துகிறபொழுது, அது *ஒரு தேங்காயின் உள்ளே உள்ள வெண்மை* என்று கொடுக்கப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை இது நல்லதல்ல. பனியையே காணாத உள்ளூர் மக்களுக்கு, *பனி* என்ற வார்த்தையையே பயன்படுத்தி, பிறகு

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

பனி என்றால் என்ன (என்பதை பின்குறிப்பில்) என்பதை விவரிக்கலாம். தற்சமயம் நான் ஒரு புதிய வேதாகமமொழிபெயர்ப்பில் (LKJV) உழைத்துக் கொண்டிருக்கிறேன். இதற்காக விசேஷமாக புதிதாக உருவாக்கப்பட்ட ஒத்தவாக்கிய அகராதியோடு சேர்ந்து வரும்.

வேதாகம அகராதிகள், பண்டைய வேத காலத்தின் பற்பல கலாச்சாங்களின் மற்றும் பழக்க வழக்கங்களின் வரலாற்று கண்ணோட்டத்தைப் பார்க்க பயனுள்ளதாயிருக்கிறது. நான்கு தொகுப்புகள் உள்ள International Standard Bible Encyclopaedia அல்லது ஐந்து தொகுப்புகள் உள்ள Interpreter's Dictionary of the Bible (இவைகளுக்கு சுருக்கமான ஒரே தொகுப்புள்ளதும் இருக்கிறது) இவைகள் பயனுள்ளவைகள். ஒரு தேவ ஊழியர் வேதவாக்கியத்தின் ஒரு பகுதியை தவறாக மேற்கோள்காட்டுவது அல்லது மூல பாஷைகளிலிருந்து தவறாக வியாக்கியானம் செய்வதைக் காட்டிலும் மோசமானது வேறொன்றும் இல்லை. ஏனெனில் அவர்களுக்காக மொழிபெயர்ப்பு செய்வதற்கு அவர்கள் மற்றவர்களை சார்ந்திருக்கிறார்கள்.

*வெளிப்பாட்டினால் படித்தல்*

வேதத்தை படிக்கும் மற்றுமொரு ஏவி எழுப்பும் முறை என்னவெனில், வெளிப்பாட்டினால் படிப்பதே. நமது தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்றப்படி குறிப்பாக பரிசுத்த ஆவியானவர் நம்மொவ்வொருவருக்கும் சத்தியங்களை வெளிப்படுத்துகிறார். அவர் சத்திய ஆவியானவரென்றும், சகலத்தையும் நமக்கு போதிப்பார் என்றும் இயேசு சொன்னார் (யோவா. 14:26; 16:13–15; 1 யோவா.2:20). இயேசு பேசிய எல்லாவற்றையும் நமக்கு ஞாபகத்திற்கு கொண்டுவருவார் என்று இயேசு சென்னார். நமது உள்ளான எண்ண தொடர் நிகழ்வுகளில் பரிசுத்த ஆவியானவர் வேலை செய்து, சத்தியத்தின் சரியான திசையை நமக்கு குறிப்பிட்டு காட்ட, நமது எண்ணங்களை ஏவி எழுப்புகிறார். சில நேரங்களில், நாம் வேதத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது, ஜெபிக்கும்போது, ஆராதிக்கும்போது, செய்தியை கேட்கும்போது அல்லது ஒரு நல்ல புத்தகத்தை வாசிக்கும்போது, நமக்கு விருப்பமான அல்லது நமது சூழ்நிலைக்கேற்ற அல்லது ஒரு தலைப்பிலோ அல்லது பகுதிகளிலோ பரிசுத்த ஆவியானவர் எண்ணங்களை ஏவி எழுப்புகிறார். இந்த *ஏவி எழுப்பப்பட்ட எண்ணங்கள்* சரியாக நடுநிலையை அடையவும், பொருத்தமான விளங்கிக்கொள்ளுதலை அடையவும், அவைகள் வேத வாக்கியங்களின் வெளிச்சத்தில் அதிகமாக படிக்கப்பட வேண்டும். அநேக நேரங்களில் அவைகள், நமக்குள் பரிசுத்த ஆவியானவர் ஏவி எழுப்பும் *வெளிப்பாட்டு எண்ணங்களாகும்.* அவைகள் வேதவாக்கியங் களுக்கு ஒத்ததாக உள்ளதா என்று காண, நாம் வேதத்தை படிக்கும்போது அவைகள் மிகவும் தெளிவாகின்றன. இந்த தொடர் நிகழ்வை *வெளிப்பாட்டினால் படித்தல்* என்றழைக்கிறோம்.

நான் யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என இயேசு சீஷர்களைக் கேட்டபோது, பேதுருதான் நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சொன்னார் (மத். 16:16). இந்த முடிவுக்கும் வெளிப்பாட்டிற்கும் வர, மாம்சமும் இரத்தமும் மட்டும் உனக்கு உதவிசெய்யவில்லை என்று இயசே பேதுருவுக்குச் சொன்னார். ஆனால், பிதாவினுடைய ஏவி எழுப்புதலினாலும் வெளிப்பாட்டினாலுமே இது நடந்தது (மத். 16:17) அவர்கள் என்ன நினைத்தார்களென்று இயேசு கேட்டு, அதற்கு பேதுரு அந்த பிரபல்யமான அறிக்கைகொடுத்த நாளுக்கு முன்பே, இயேசுதான் கிறிஸ்து என்ற எண்ணங்கள், பேதுருவின் சிந்தனையில் ஓடிக்கொண்டிருந்திருக்க வேண்டும். இன்று, அதே பரிசுத்த ஆவியானவர் நமது இருதயங்களிலும் சிந்தனைகளிலும் வேலைசெய்து, நமது தேவைகளுக் கும் ஆசைகளுக்கும் அவர் அளிக்கும் பதிலாக, ஏவி எழுப்பும் எண்ணங்களை அவர் கொண்டுவருகிறார்.

ஏவி எழுப்பப்படும் ஒவ்வொரு எண்ணமும், அதன் பிழையின்மை தீர்மானிக்கப்படவும், எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு ஒத்துவராத பகுதிகளை சுத்தப்படுத்தவும், வேதவாக்கியங்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

களின் வெளிச்சத்தில் முழுவதும் கருத்தாய் ஆராயப்பட வேண்டும். ஒவ்வொரு உபதேசமும், ஒவ்வொரு கொள்கையும், ஒவ்வொரு ஆலோசனையும் போதனையும், சீர்திருத்தலுக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் அந்த தலைப்புக்குச் சம்பந்தப்பட்ட எல்லா வேதவாக்கியங்களோடும் பொருத்தமாய் உள்ளதா என்று சோதித்துப்பார்க்க வேண்டும் (2 தீமோ. 3:16). சில நேரங்களில் ஏவி எழுப்பப்பட்ட எண்ணம் ஒன்று, மாதக்கணக்கில் அல்லது வருடக்கணக்கில் ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொள்ளும். உதாரணமாக ஒரு நாள் நான் கென்னத் ஹேகின் அவர்களின் 'தரிசனங்களை நான் விசுவாசிக்கிறேன்' என்ற புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது, பிசாசின்மேலே எல்லா அதிகாரங்களும் சபைக்கு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளதால், பிசாசுகளைத் துரத்துவது சபையின் பொறுப்பேயாகும். ஆனால், அதை செய்யும்படி இயேசுவை நாம் கேட்கக்கூடாது என்ற ஏவி எழுப்பப்பட்ட எண்ணம் எனக்கு உண்டானது (ஆண்டவருக்கும் அவருக்கும் இடையில் அந்தப் பிசாசு ஒடினபோது, இயேசுவை ஹேகின் தரிசித்த மூன்றாவது தரிசன நிகழ்ச்சியில் உள்ளது). அதே கொள்கை சுகமாக்குதலிலும் அப்பியாசிக்கப்படுகிறது. சுகமாக்குதலில் வந்த இந்த ஏவி எழுப்புதலின் எண்ணத்தை சோதிக்க, ஆதியாகமம் முதல் வெளிப்பாடு வரையில் உள்ள ஒவ்வொரு சுகமாக்குதலின் வேதவாக்கியத்தையும் ஆராய வேண்டியிருந்தது. இது நடைபெற ஆறு மாத வேதபாட படிப்பு தேவைப்பட்டது. புதிய ஏற்பாட்டு சுகத்தின் விளங்கிக் கொள்ளுதலை நான் உருவாக்கிக் கொள்ளும் முன்பு, நடபடி புத்தகத்திலும் யாக்கோபின் புத்தகத்திலும் நான் சந்தித்த சில வசனங்களுக்கு, இன்னும் அதிகமாக மூல கிரேக்க மொழியில் பரீட்சித்துப் பார்ப்பதும், விளக்கங்களைப் பெற்றுகொள்வதும் அவசியமாயிருந்தது.

இன்னும், தேவன் தொடர்ந்து புதிய ஆவிக்குரிய அனுபவங்களையும், புதிய ஏவி எழுப்பப் படும் எண்ணங்களையும் கொண்டு வருகிறார். அவைகளை உபதேசங்களாக ஏற்று பயன் படுத்தப்பட ஆயத்தமாகும் முன்பு, எழுதப்பட்ட தேவ வார்த்தையினால் அவைகளை ஆழமாக பரீட்சித்துப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது. நாம் தேவனோடு நடந்து, தொடர்ந்து அவரில் வளருவோமாகில், நாம் தொடர்ந்து புதிய அனுபவங்களையும் ஏவி எழுப்பப்படும் எண்ணங்க ளையும், பல பகுதிகளிலும் பெற்றுக்கொள்வோம். அவைகள் வேதபாட படிப்புதிட்டத்தினால் ஆராயப்பட்டு, அந்தப் பாடத்திற்குச் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு வசனமும் பரீட்சிக்கப்பட வேண்டும். வெளிப்பாட்டின் இந்தப் படிப்பு கடின வேலையினால் செய்து முடிக்கப்பட வேண்டும். சீர்திருத்தலையும் கடிந்துகொள்ளுதலையும் வேதவாக்கியங்கள் கொண்டுவர, நாம் திறந்த மனதோடு வேதத்தை அணுக வேண்டும் (ஒருவருக்கே சொந்தமான இறையியலுக்கு பொருந்தும்படி வேதவாக்கியங்களை முறுக்கிக்கொள்ளுதலுக்கு இது எதிரானது). சில நேரங்களில் பிரசங்கிமார்கள் அறிவிக்கும் 'வெளிப்பாடுகள்' பாதி வெந்ததாகவும், வேதாகம கண்ணோட்டத்தில் பரிதாபமான நிலையில் ஆராய்ச்சி செய்யப்பட்டதாகவும் உள்ளன. பல நேரங்களில் இந்த பிரசங்கியார்கள் மிகவும் குறைவான நேரமே வேதபாடத்திற்கு ஒதுக்குவ தாலும் 'வெளிப்பாடுகள்' என்று சொல்லப் படுபவை ஒருபுறச் சாய்வுள்ளதாயும், கிறிஸ்துவின் சரீரத்தினால் தன்மயமாக்க ஆயத்தமற்றதாயும் முதிர்ச்சியடையாததாயும் உள்ளன.

பரிசுத்த ஆவியானவரிடமிருந்து பெற்றுக்கொண்டதாக நீங்கள் நினைக்கும், ஏவி எழுப்பப் பட்ட எந்த எண்ணங்களையும் வெளிப்பாடுகளையும் எழுதிவைக்க வேண்டும். அதன்பிறகு அவைகளைப் பற்றி வேத வாக்கியங்கள் என்ன சொல்கின்றன என்று பரீட்சித்துப் பார்க்க, வேதாகமத்தை முறையாகப் படிக்க, தரமுள்ள நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். தேவனில் உயர்வான ஆவிக்குரிய நபராக உண்மையாக வளரவும், அதே நேரத்தில் நல்ல சமச்சீர் நிலையிலிருக்கவும், தேவன் நம்மை நம்பி அவரது கிருபையால் எவ்வளவு அதிகமாக ஆவிக்குரிய அனுபவங்களையும் வெளிப்பாடுகளையும் நமக்கு கொடுத்தாலும், வேதத்தின் மேல் நமக்கு போலியில்லாத உண்மையான அன்பு வேண்டும். பூமியின்மேல் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் நம்மை வழிநடத்தும், ஏவி எழுப்பப்பட்ட தேவ வார்த்தையாகவே அதை மதிக்க வேண்டும். தேவனை அறிந்துகொள்ள வளர விரும்பி மற்றும் கிறிஸ்துவின் முழு சரீரத்திற்கும் ஆசீர்வாதமாக மாற விரும்பும் ஒவ்வொரு கிறிஸ்தவனும், வேதத்தோடு தனிப்பட்ட படிப்பு நேரத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

*அத்தியாயம் 5*

# எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் கூடி இருக்கிறார்களோ

ஆவிக்குரிய உலகத்தின் தரிசனத்தில், தேவனில் உள்ள ஒவ்வொரு ஆவியும் தங்களுக்கு மேலே இருந்த மற்றவர்களால், பராமரிக்கப்பட்டுக்கொண்டிருந்ததையும், ஆவிக் குரிய நிலையில் தங்களுக்கு கீழே இருந்த மற்றவர்களை ஒவ்வொருவரும் பராமரிக்கிற தையும் நான் கண்டேன். இது ஒரு அற்புதமான அழகான பின்தொடர் முறைமையாக பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டது. ஆண்டவரில் ஒவ்வொருவரும் மற்றவரோடு சேர்ந்து அதில் வளர்ந்தார்கள். நாம் உலகமுழுவதிற்கும் சென்று, இயேசு கட்டளை யிட்ட யாவற்றையும் அவர்கள் கைக்கொள்ளும்படி போதனை செய்து சீஷராக்கும்படி, இயேசு சொன்னார் (மத். 28:19–20). இந்தப் புத்தகம், ஒருவர் ஆண்டவரோடு தனிப்பட்ட பக்தி தியான நேரத்தை வளர்த்துக்கொள்ள எழுதப்பட்டாலும், தனிப்பட்ட வளர்ச்சி என்ற அம்சம் ஒன்று உள்ளது. அதில் ஒருவர் பராமரிக்கும் மண்டலத்தில் சம்பந்தப்பட்டவராக இல்லா விட்டால், தனிப்பட்ட வெளிப்பாட்டின் அபரிமித தன்மையையும் வளர்ச்சியும் ஸ்தம்பித்து விடும். இந்த மண்டலத்தில் ஒவ்வொருவரும் மற்றவர்களால் (தனித்தனியாக) பராமரிக்கப்படுகிறார்கள். அவர்களும் தனிப்பட்ட முறையில் (தனித்தனியாக) மற்றவர்களை யும் பராமரிக்கிறவர்களாக இருக்கிறார்கள். கொடுப்பதும் பெற்றுக்கொள்வதும், பணத்தை கொடுப்பதற்கும் செழிப்பிற்குமான விதியாக மட்டும் பொருந்தாமல், ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் தேவனில் வெளிப்பாட்டு வளர்ச்சியின் விதிக்கும் பொருந்தும் (லூக். 6:37–38; மத். 10:40–42; பிலி. 4:15).

### *இரண்டு அல்லது மூவரோடு ஐக்கியம்*

இயேசு தனது வெளிப்படுத்தப்பட பிரசன்னத்தை பற்றிப் பேசும்போது, அவர் இரண்டு அல்லது மூன்று என்று குறிப்பாக சொன்னதற்கும் ஒரு காரணம் உண்டு (மத். 18:20). எத்தனை லட்சங்களுக்கும் கோடிகளுக்கும் நாம் செல்வாக்குள்ளவர்களாயிருந்தாலும், முடிவிலே ஒவ்வொரு நாளிலும் நாம் மற்றவர்களோடு வைத்துக்கொள்ளும் நடைமுறை உறவு இரண்டோ அல்லது மூன்று பேருக்குள்தான் அமைகிறது. பூமியிலே தனது சரீர ஊழிய நாட்களிலே, இயேசுவுக்கு ஆயிரக்கணக்கான விசுவாசிகள் இருந்தார்கள். அவர்களை இரண்டு இரண்டு பேராக அனுப்பினார். ஆனால், விசேஷமாக தனது பனிரெண்டு சீஷர்கள் மேல் தனது முயற்சிகளை கவனமாக செலுத்தினார். அந்த பனிரெண்டு பேரில், அவர் மூவரைத் தெரிந்துகொண்டார்: பேதுரு யாக்கோபு மற்றும் யோவான். அவர்களோடு சம்பந்தப்படுத்திக்கொண்டார். அவர்களுக்கு வெளிப்படுத்தினார், மற்ற சீஷர்களைக் காட்டிலும் அதிக நெருக்கமாக அவர்களுக்கு பயிற்சி கொடுத்தார். ஏனெனில், அவர் விட்டுச் செல்லும் மந்தையை நடத்தும் முக்கிய மைய தலைவர்களாயிருக்க வேண்டியவர்களாய் அவர்கள் இருந்தார்கள்.

பவுல் பர்னபாவோடு மிகவும் நெருக்கமான உறவு உள்ளவராயிருந்தார். இது ஆரம்ப கிறிஸ்தவ வாழ்வு மற்றும் ஆரம்ப ஊழிய வாழ்விலும் பல ஆண்டுகள் தொடர்ந்து இருந்தது (அப். 9:27; 11:25; 13:1–2). அவர்களுக்கு ஒருவரோடு ஒருவர் ஒத்துக்கொள்ளாத காரியங்களும் வேறுபாடுகளும் இருந்தன (அப். 15:37–39; கலா. 2:13). அவர்கள் இருவரும் பிரிந்த பிறகு, பவுலுக்கு வித்தியாசமான ஊழிய பங்காளர்களும் பின்பற்றுகிறவர்களும் இருந்தார்கள் (சீலா, தீமோத்தேயு முதலியோர்). ஆனால், இவர்களில் ஒருவரும் நல்ல தாக்கத்தை கிறிஸ்தவ நடக்கையிலும் ஊழியத்திலும், பவுலின் ஆரம்ப உருவாக்கப்பட்ட முக்கிய வருடங்களில் பவுலுக்கு பர்னபா கொடுத்தது போல கொடுக்கவில்லை. எந்த

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

மனிதனும் ஒரு தீவு அல்ல. தனியாக தனிப்பட்ட வாழ்வில் ஒருவரும் வளர்வதில்லை. நம் ஒவ்வொருவருக்கும் நமது இரண்டு அல்லது மூன்று என்ற வட்டங்கள் உண்டு. இந்த உள் வட்டம் காலத்தை பொருத்தும், வாழ்வின் வித்தியாசமான நிலைகளிலும் மாறும். சில உள் வட்டங்கள் பல பத்து ஆண்டுகள் நீடிக்கலாம், மற்றவை வருடங்களுக்கு இருக்கும், இன்னும் சில வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் (திருமண உறவு அதைப்போன்ற பகுதியாக கருதப் படுகிறது). எந்த நிறுவனமோ அல்லது மனித பின்தொடர் மண்டலமோ அவ்வளவு கச்சிதமான அல்லது சிக்கலான பரலோக மற்றும் ஆவிக்குரிய உலகத்திற்கு ஒப்பான மண்டலத்தை உருவாக்க முடியாது. எனவே அதற்காக முயற்சிக்க வேண்டாம். அது நன்மைக்குப் பதிலாக அதிக தீமையை கொண்டுவரும். இதெல்லாமே தனிப்பட்ட முறையிலும் ஆவியானவராலும் நடத்தப்பட வேண்டும்.

*நம்மைக் கொடுப்பது தனிப்பட்ட வளர்ச்சியைக் கொண்டுவருகிறது*

யாரை நாம் பராமரிக்க வேண்டும், யாருக்கு கிறிஸ்தவின் அன்பை பகிர்ந்துகொள்ள வேண்டும், யாரை சீஷராக்க வேண்டும் என்று மக்களை கண்டுபிடிக்க, பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்யும்படி, நாம் பரிசுத்த ஆவியானவரை அனுமதிக்க வேண்டும் என்ற கூற்று எப்பொழுதுமே இருக்கிறது. நம்மை பராமரிக்க மற்றவர்களை நடத்தி நம்மை கண்டுபிடிக்கச் செய்வார்; நம் எல்லாரையும் பராமரிக்க அவர் தேவ தூதர்களை நியமித்திருக்கிறார். நமது வாழ்வில் ஒவ்வொரு நிலைகளிலும் நம்மை போஷிக்க, சரியான மக்களை அவர் நியமிப்பார். நமது கடமையாக (நம்மை பராமரிக்க வேண்டியவர்களை நாம் அறிந்திருந்தாலும் அறியாமலிருந்தாலும்) நாம் கடந்து சென்று பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டு, மற்றவர்களை பராமரிக்க வேண்டும் – அவர்களை நேசிக்க வேண்டும், உதவி செய்ய வேண்டும், அவர்களுக்கு கிறிஸ்துவாக இருக்க வேண்டும். இது நிச்சயமாகவே, உங்கள் திருமணத்துணையாளர், உங்கள் குடும்பம் உங்களுக்கு அன்பானவர்களை உள்ளடக்கும். இந்த உங்கள் சொந்த குடும்ப வட்டத்திற்கு வெளியே இருக்கும்; பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு நியமிக்கும் ஆவிக்குரிய வட்டாரத்திற்குள் இருப்பவர்களையும் குறிக்கும். அவர்களையும் பராமரிக்க பொதுவாக உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவின் அன்பையும் மனதுருக்கத்தையும் பரிசுத்த ஆவியானவர் எழுப்பி விடுவார்.

கிறிஸ்துவுக்குள் மற்றவர்களுக்கு உதவ ஒருவர் கொடுக்கும் வழக்கமான அன்பு மற்றும் பராமரிப்போடு, அவர்களோடு ஜெபிக்கவும், அவர்களை சந்திக்கவும் தனி நபருக்கு ஒருவருக்கு ஒருவர் என்ற நிலையில் வேதபாடம் சொல்லிக்கொடுக்கவும் செய்யும் நேர முதலீடும் அதில் அடங்கும். ஆம், நாம் ஒவ்வொருவருமே நமது வாழ்விலிருந்து பகிர்ந்துகொள்ளவும், வேத வாக்கியங்களைப் பற்றிய நமது தனிப்பட்ட அறிவிலிருந்து மற்றவர்களுக்கு ஒருவரோடு ஒருவர் (அல்லது ஒருவராக இரண்டு பேருக்கும் அல்லது ஒருவராக மூன்றுபேருக்கும்) உதவி செய்யவும் முடியும். இந்த வாழ்வு மற்றும் நேரத்தின் முதலீட்டை, நமது தனிப்பட்ட வளர்ச்சியாக கருதக் கூடாது. நமது வாழ்க்கைகளை நாம் கொடுக்காவிட்டால், நாம் வளரமுடியாது. நல்ல செய்தி என்னவெனில், எவ்வளவு அதிகமாக நாம் கொடுக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் பெற்றுக்கொள்கிறோம், அது என்றும் முடிவில்லாமல், விசாலமாகிற ஆசீர்வாத சுழற்சியாகும். நீங்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்கையில், உங்களது சொந்த ஜெப வாழ்க்கை முன்னேறும், உங்களுக்குத் தெரிந்தவைகளை நீங்கள் மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கும்போது, உங்களது அறிவு பெருகுகிறது. அன்பைக் கற்றுக் கொள்ளும் ஒரே வழி, அதை செய்வதால் மட்டுமே.

நீங்கள் யாரை நேசித்து சீஷராக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறாரோ, அவர்களிடம் உங்களை நடத்தும்படி, பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள். அவர்களில் சிலர் ஏற்கனவே நீங்கள் அறிந்த வட்டத்திற்குள், பேதுரு யாக்கோபு யோவான் இயேசுவை சந்திக்கும் முன்பு மீன் பிடிப்பதில் பங்காளிகளாயிருந்தது போல், இருப்பார்கள் (லூக். 5:10). மற்றவர்களை, நேரம் வரும்போது அவர்களை நீங்கள் சந்திக்கும்படி பரிசுத்த ஆவியானவர் செய்வார். இந்த ஜனங்கள் பரலோகத்தினால் உங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், உங்களது தெரிந்தெடுப்பினால் அல்ல என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதன்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பொருள் என்னவெனில், பரிசுத்த ஆவியானவர் உங்களை யாரோடு இணைக்கிறார் என்பதைப் பற்றி நீங்கள் அவருக்கு உணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டும். நாம் விரும்புகிறோமோ இல்லையோ, வரங்கள் சில முறைகளில் நம்மிலிருந்து பாய்ந்து செல்ல, நாம் எல்லாருமே மற்ற ஜனங்களோடு இணைக்கப்பட வேண்டும் (எபே. 4:16). கிறிஸ்துவின் முழு சரீரமானது அன்பினால் தனக்கு பக்திவிருத்தி உண்டாக்கி வளர, ஒவ்வொரு அங்கமும் தனது பங்களிப்பின் வேலையை செய்ய வேண்டும். தனிப்பட்ட வளர்ச்சி என்பது, இரண்டு வழி – கொடுப்பதும் பெற்றுக்கொளவதும் என்ற உறவினால் மீதியுள்ள கிறிஸ்துவின் சரீரத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இயேசுவே திராட்சைச் செடியாக உள்ளார், நாம் எல்லாரும் அவருடைய கிளைகள். திராட்சைச் செடியின் கொடியாக நாம் நமது சிறிய பகுதியை செய்வது அவசியமாகிறது (யோவா. 15:5).

வேதத்தையும் தேவனிடமிருந்து வரும் வெளிப்பாடுகளையும் விளங்கிக்கொள்ளும் பகுதியில், நீங்கள் வேதவாக்கியங்களைப் படித்து மற்றவர்களுக்கு (ஒருவருக்கு ஒருவர் அல்லது ஒருவராக அநேகருக்கு) சொல்லிக்கொடுக்கும்போது, மற்றவர்களுக்கு சாட்சி சொல்லி அல்லது பகிர்ந்துகொள்ளும்போது, உங்களிலே வெளிப்பாடு உறுதியாகப்படுவதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். அதுமட்டுமில்லாமல், நீங்கள் விளங்கிக்கொண்டவைகளை சில வேளைகளில் மற்றவர்களுக்கு பகிர்ந்துகொள்ளும் வேளையில், அந்த பகுதியை சுற்றியுள்ள சத்தியங்களின் இன்னுமதிகமான ஏவி எழுப்பப்படுதலை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். அது வேதத்திலே இன்னும் ஒரு சுற்று ஆராய்ச்சி செய்யும்படி உங்களை ஏவி எழுப்பும். கிறிஸ்தவம் என்பது ஏதோ வெறும் அறிவு சார்ந்த நம்பிக்கைகளும் விசுவாசப் பிரமாணங்களும் மட்டுமல்ல. அதிக ஆவிக்குரியவர்களாகவும் வாழ்வில் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் – அதிக வெற்றிபெற்றவர்களாயிருக்கவும் நம்மை பெலப்படுத்தும் மற்றும் தேவனிடமிருந்து வரும் தெய்வீக வெளிப்பாடுகளை தன்மயமாக்குவதும் அல்ல. இது வாழ்வை வாழ்விற்கு பகிர்ந்தளிப்பதாகும் – உண்மையான நபர், ஒருவருக்கு ஒருவராக இன்னும் ஒரு உண்மையான நபருக்கு.

தேவன் அதிகமாய் உலகத்தை நேசித்ததினால் அவர் தனது ஒரே பேரான குமாரனை கொடுத்ததுபோல, இயேசு அதிகமாய் நம்மை நேசித்ததினால் அவர் தனது வாழ்வை நமக்குக் கொடுத்ததுபோல, நாமும் மற்றவர்களை அதிகமாக நேசிப்பதினால் மற்றவர்களுக்கு உதவி செய்ய நமது வாழ்வையும் கொடுக்க வேண்டும் (யோவா. 3:16; ரோம. 5:8; 1 யோவா. 3:16). இயேசு உங்களை நேசித்தது போல நீங்களும் கடந்து சென்று நேசியுங்கள். கடந்து சென்று இயேசுவின் சீஷராக்குங்கள்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 